Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-18 02-03-2005 புதன்கிழமை ஓசை -12




### -மட்டு- அம்பாறையில் நடத்தப்படும் தாக்குதல் -

# புலிகளையும், தமிழ் மக்களையும் சீண்டும் நடவடிக்கை போன்றது!

## விடுதலைப்புலிகள் பலத்த கண்டனம்

(கிளிநொச்சி)

**விசேட அதிரடிப்படையின் ஒத்துழைப்பின்றி இத்தாக்குதலை மேற்கொண்டிருக்க முடியாது இத்தகைய நடவடிக்கை மூன்று வருட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கும் பாரதூர விளைவுகளை ஏற்படுத்துமென நாம் கருதுகிறோம். அத்தோடு தமிழ் மக்களையும், விடுதலைப்புலிகளையும் சீண்டும் சம்பவங்களாகவே இவை அமைகின்றன என அம்பாறை மாவட்டத்தில் பெண் போராளிகள் மீதான தாக்குதல் குறித்து விடுதலைப்புலிகள் விடுத்த பத்திரிகைச் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.**

இது குறித்து வெளியான பத்திரிகைச் செய்தியின் விபரம் வருமாறு:- நேற்றுமுன்தினம் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி உள்ளிட்ட மூன்று பெண் போராளிகள் மீது ஆயுதக்குழுவினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர்கள் மூவரும் படுகாயமடைந்துள்ளனர். விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி மற்றும் சசிமதி, அகநிலா ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை 6.00 மணியளவில் கொக்கட்டிச் சோலையிலிருந்து தங்கவேலா யுதபுரத்தை நோக்கி முச்சக்கர வண்டியொன்றில் சென்று கொண் டிருந்தபோது, தம்பிலுவில் சவக்காலைக்கண்மையில் வைத்து உந்துருளியில் வந்த இனந்தெரி (12ஆம்பக்கம் பார்க்க)

## காயமடைந்த பெண்போராளிகள் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்கு

அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் துப்பாக்கிதாரியின் தாக்குதலுக்கு உள்ளான தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் சிகிச்சைக்காக நேற்றிரவு கொழும்புக்கு உலங்குவானூர்தி மூலம் அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை தமிழீழ விடு தலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட துணை அரசியல்துறை பொறுப்பாளர் குயிலின்பன் உறுதிப்படுத்தியுள்ளார்.போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான அனுமதியை அரசாங்க சமாதான செயலகம் கிளிநொச்சி சமாதான செயலகத்திற்கு வழங்கியதை அடுத்தே இவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ்டோட்டி தெரிவிக்கையில்,இந்தச் சம்பவம் தொடர்பாக தற்சமயம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசார

(12ஆம் பக்கம் பார்க்க)

### -பெண்போராளிகள் மீதான தாக்குதல் தொடர்பில்-

## புலிகள் வழங்கிய தகவலின்பேரில் சந்தேக நபர் ஒருவர் கைது

பெண்போராளிகள் மீதான துப்பாக்கிச்சூடு தொடர்பாக புலிகளால் தெரிவிக்கப்பட்ட தகவலொன்றின் அடிப்படையில் சந்தேகத்தின்பேரில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பெரிய கல்லாற்றைச் சேர்ந்த பிரதீபன் எனப்படும் ஜோன்சன் ஜெயகாந்தன் (வயது28) எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளினால் தெரிவிக்கப்பட்ட தகவலொன்றின் பேரில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரிசுனாமி அகதிமுகாமில் கடமைகளில் ஈடுபட்டிருந்த. (12ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தவர் மரணம்

மட்டக்களப்பு சாராயத்த வறணைச் சந்தியில் நேற்றுமுன் தினமிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த முன்னாள் இராணுவச் சிப்பாய் நேற்று அதிகாலை வைத்தியசாலையில் மரணமானார்.

சுப்பிரமணியம் தயாநிதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பெண் போராளிகள் மீதான தாக்குதலை பாரதூரமானதாகக் கருதுகிறோம்

### -கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண்போராளிகளின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மீண்டும் இலங்கையில் வன்முறைகளுக்கு வழிவகுத்துவிடும் என அச்சம் ஏற்பட்டுள்ளதாக பிரித்தானிய ஒலிபரப்பு சேவை தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ப்ஸ்டோட்டியரின் கருத்தைச் சுட்டிக்காட்டி செய்தி வெளியிட்டுள்ள பிரித்தானிய ஒலிபரப்பு சேவை (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானங்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### -சிறிலங்கா விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான விமானங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடப்பட்டிருக்கும் பின்னணியில் இரணைமடுப் பிரதேசத்தில் விமான ஓடுதளம் ஒன்றும், இரண்டு விமானங்களும் வைத்திருப்பது தேசியப் பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் எனவும் அதற்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விமானப்படைத் தளபதி எயாமார்சல் டொனால்ட் பெரோரோதெரிவித்துள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

## வவு.அரசியல்துறைச் செயலகத்திற்கு கண்காணிப்புக் குழு அனுமதியின்றிப் பிரவேசம்

### -வவு.அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆட்சேபம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட அரசியல்துறை செயலகத்திற்கு நேற்று வந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டப் பிரதிநிதிகள் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டனர் என விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மதியம் 2.30 மணியளவில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்ட இணைப்பாளரும், உதவி இணைப்பாளரும் எமது அலுவலகத்திற்கு சந்திப்பிற்காக வந்திருந்தனர். அப்போது நான் மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டிருந்தேன்.

வரவேற்பு மண்டபத்தில் இருந்து கண்காணிப்புக் குழுவினர் திடீரென எமது அலுவலகத்தின் பின் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்து கொண்டனர்.

இவ்வாறு அனுமதியின்றி அலுவலக பின்பகு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ வைப்பகத்தின் 11 ஆவது கிளை பூநகரியில் நேற்று திறந்து வைப்பு



தமிழீழ வைப்பகத்தின் 11 ஆவது கிளை நேற்று பூநகரியில் திறந்து வைக்கப்பட்டது.

பூநகரி நகரப்பகுதியில் அமைக்கப்பட்ட இவ் வைப்பகத்தின் 11 ஆவது கிளையானது நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்களால் நாடாவெட்டி திறந்து வைக்கப்பட்டது. முன்னதாக இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாகப் பொதுச்சுடரினை பூநகரிப்பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் ஜோசேப் பிரான்சிஸ் அவர்களும், சேரன் வாணிபப் பணிப்பாளர் பாபு அவர்களும் தமிழீழ காவல்துறையின் மன்னார் மாவட்ட கண்காணிப்பாளர் கண்ணாளன் அவர்களும் ஏற்றிவைக்க தமழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் ஏற்றினார். தமிழீழ வைப்பகத்தின் கொடியை தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் வீரத்தேவன் அவர்கள் ஏற்றினார்.

ஆளுகை மேலாளர் க.பாலகிருஷ்ணனின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் சிறிகந்தகுமார் நிதித்துறை வணிக ஒன்றியத் தலைவர் சொ. வெற்றியரசன், பூநகரி

(12ஆம் பக்கம் பார்க்க)

# பேரலையால் செயலிழந்துள்ள வர்த்தகத்துறையை புத்துயிரூட்டுக!

## -முல்லைவர்த்தகர் சங்கம் அரச அதிபரிடம் கோரிக்கை

நீண்டகால யுத்தத்திற்குப்பின் புத்துயிர் பெற்றுவந்த முல்லை வர்த்தகர் சங்கம் டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமிப் பேரலைகளால் செயலிழந்து நிற்கின்றது. இவ் வர்த்தக சங்கத்திற்கு மீண்டும் புத்துயிரூட்ட முன்வாருங்கள் என்று முல்லைத்தீவு அரச அதிபரிடம் முல்லை வர்த்தக சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆழிப்பேரலைகள் தாக்கி இரண்டு மாத காலமாகியும், இது வரையில் எல்லாவற்றையும் இழந்து நிற்கின்ற வர்த்தக சமூகத்திற்கு எந்தவொரு அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ எதுவித கொடுப்பனவுகளும், உதவிகளும் வழங்குவதற்கு முன்வரவில்லை.

இராணுவ நடவடிக்கைக்குப் பின் முல்லை நகரைக் கட்டியெழுப்பிப் புதுப்பொலிவுடன் திகழ்வதற்கு வர்த்தக சமூகத்தினரே மூலகாரணமாக இருந்தார்கள். விலை மதிப்பிட முடியாத உரியிழப்புகளாலும், பெறுமதிமிக்க சொத்திழப்புகளாலும் வர்த்தக சமூகமாகிய நாம் மிகவும் மோசமான நிலையில் பாதிப்படைந்து மீள எழும்ப முடியாத நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

வர்த்தகத் துறையினராகிய நாம் எங்களது சொந்த முதலில் முற்று முழுதாக இயங்குவது இல்லையென்பது யாவரும் அறிந்த விடயமே. அதாவது வங்கிக்கடன்கள் நிறுவனக் கடன்கள்,தனியார் வட்டிக்கடன்கள் போன்றவற்றைக்கொண்டுதான் எமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தோம்.

சுனாமிப் பேரனர்த்தத்தினால் முற்றுமுழுதாக சொத்துக்கள் யாவற்றையும் இழந்த நிலையில் உள்ளதால் மேற்குறிப்பிட்ட கடன்களை மீளச் செலுத்த முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதனால் வர்த்தக சமூகத்தினராகிய நாம் பல அசௌகரியங்ளையும் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்த நிலையில் எமது வர்த்தக சமூகத்திற்கு அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள்.தொண்டர் அமைப்புகள் உதவி புரிய முன்வராது விட்டால் எங்களை நாங்களே அழிப்பதைத் தவிர எங்களுக்கு வேறுவழி எதுவுமில்லை. எமது வர்த்தக சங்கத்தில் வர்த்தகர்கள் மட்டுமல்லாது கைத்தொழில் மற்றும் சுயதொழில் போன்றவற்றில் ஈடுபடுபவர்களும் அங்கம் வகிக்கின்றார்கள்.

எமது பகுதியில் தொழில் ரீதியாகப் பாதிப்படைந்து நிற்கும் எமக்கு உதவிக்கரத்தை நீட்ட வேண்டுமென எதிர்பார்த்து எமது கோரிக்கைகளை முன்வைகின்றோம்.

பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கும், சுயதொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கும் ஏனைய பணியாளர்களுக்கும் உடனடித் தேவைக்கான பொருட்களைப் பெற்றுத்தர வேண்டும், முல்லைத்தீவில் தொழில் நிமித்தம் பாதிக்கப்பட்ட வர்த்தக தொழில் செய்து வந்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும், கடல் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வழங்கப்படும் மாதாந்த உதவிக் கொடுப்பனவும், ஏனைய அனைத்துக் கொடுப்பனவுகளும் பெற்றுத்தர வேண்டும்., பாதிக்கப்பட்ட வர்த்தகத் தொழில் நிலையங்கள், பாதிக்கப்பட்ட அடிப்படையில் அவர்களுக்கான நட்ட ஈட்டினை மிக விரைவாகப் பெற்றுத்தருதல் வேண்டும்., அரச நிறுவனங்களிடம் இருந்தோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தோ நாம் மீண்டும் வர்த்தகத் துறையினை ஆரம்பிப்பதற்குஉதவித்தொகைகளையும் ஏனைய மானியங்களையும்பெற்றுத்தர வேண்டும்.,எமது சகவர்த்தகர்களுக்கும் சுயதொழிலில் ஈடுபட்டு வந்தவர்களுக்கும், அரச வங்கிகளிலிருந்து வங்கிக் கடன்களைப் பெற்றுத் தரவேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். (20,46)

# மழை நீர் சேமிக்கும் திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

மழை நீரினைச் சுத்திகரித்து சேமிக்கும் தொட்டி கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.

சுமார் 8000 லீற்றர் நீரினை சேமித்து வைக்கக் கூடிய மேற்படி தொட்டியில் முன்மாதிரி நடவடிக்கையாக கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வருகின்றது. இதனை நீர் முகாமைத்துவ ஆய்வு நிபுணர் தணுஜ ஆரியநந்த என்பவர் நிர்வகித்து வருகின்றார். இவ்வகைத் நீர்த் தொட்டிகளானது. வடகிழக்குப் பகுதியில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 13 தொட்டிகள் வீதம் அமைத்துக்கொடுக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இவை அவுஸ்திரேலிய நாட்டின் நிதியுதவியுடன் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

அத்தோடு இந்நீர்த் தொட்டிகள் அமைப்பதற்குரிய மேசன் தொழிலாளருக்குரிய பயிற்சியினையும் வழங்கி வருகின்றனர். பின்னர் அவர்கள் ஊடாக ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாக நீர்த் தொட்டிகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. இதற்கான ஒழுங்குகள் யாவற்றையும் கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்டு வருவதாக அதன் தலைவர் க.கணேசபிள்ளை தெரிவித்தார். (கு)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்

23.10.1983

தாயக மண்ணில்

02.03.2000

வீரவேங்கை அனுதன்

சம்பவம்:– 02. 03. 2000 அன்று மன்னார் குருவிச்சான் பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலின்போது

வீரத்தின் வித்தே, விடுதலையின் விடிவிளக்கே
வரிப்புலித்தலைவனின் சேனையில்அணிவகுத்து
வீறு நடைபோட்டு களம் சென்ற விடுதலை வீரனே
பகைவன் உன்மார்பில் வைத்த குறி வடு இன்னும் ஆறவில்லையடா
எம் மனதில்–தம்பி
பள்ளிப் பருவத்திலும் பகைவன் வஞ்சமதை
மாணவ மனங்களிலே மாற்றத்தை வைத்தாயடா
வாழ்விழந்த எம் மக்களுக்காய் வரிப்புலிச் சேனையிலே
களம் புகுந்து போர் புரிந்தாயடா– தம்பி –நீ

இந் நாளில் இவருடன் வீரச்சாவடைந்த அனைவரையும் நினைவு கூருகின்றோம்.

உம்பிரிவால் துயருறும் அண்ணன்
போராளி-இசையமுதன்

(5700)

## வீதி புனரமைக்கப்படுமா?

யாழ்.தீவகத்தின் அராலிச் சந்தியிலிருந்து வேலணை வரையான பிரதான வீதி மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது. இதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

எனினும் இது குறித்து எவரும் கவனம் செலுத்தவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. (33)

## பேருந்து சேவையை விஸ்தரிக்குக!

யாழ் நகரிலிருந்து இராச வீதியூடாக அச்சுவேலி வரையில் இடம் பெறும் பேருந்துப்போக்கு வரத்துச் சேவையை பாடசாலை நாட்களில் விஸ்தரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேவையில் ஒரு பேருந்து மட்டுமே ஈடுபடுத்தப்பட்டு வருவதால் மாணவர்களும் , மக்களும் ஒரே பேருந்திலேயே பயணிக்க வேண்டிய நிலை உள்ளதால் பேருந்தினுள் பெரும் நெரிசல் ஏற்படுகிறது.இதனால் பயணிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைச் சுட்டிக்காட்டியே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

## வரிவிளம்பரம்

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொளளவும், போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும். பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி. T.P 021-2285750 (சி.11235)

### கண்ணிவெடிகள் அழிப்பு

டென்மார்க்கைச்சேர்ந்த டெனிஸ் கண்ணிவெடிகளை அகற்றும் பிரிவினரால் குப்பிளான், மல்லாகம், ஏழாலை போன்றபகுதிகளில் இருந்து மீட்கப்பட்டஒருதொகுதி வெடிபொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன.(33)

### காணி விற்பனைக்கு

பரந்தன்-பூநகரி வீதியில் தெற்குப்புறமாக (பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் அண்மையில்) நீர்ப்பாசன வசதியுடன் கூடிய 4 1/2 ஏக்கர் வயல்க்காணி விற்பனைக்கு உள்ளது. அரிசி ஆலை,வர்த்தகநிலையங்கள் அமைப்பதற்கு வாய்ப்பானது. தொடர்பு T.P 0112508992,021-2285092 தகவல் :- க.பத்மநாதன் (5758)

### காணித்துண்டு விற்பனைக்குண்டு

வள்ளிபுனத்தில் விக்கி திட்ட வீதியில் காணித்துண்டு விற்பனைக்குண்டு. தொடர்பு தி.ரவி, நெடியகாடு, வல்வெட்டித்துறை. (5699)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி தர்மசறோஜினி பஞ்சரட்ணம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை) மறைவு–28–02–2005

அன்னாரின் பிரிவால் துயருறும்
துணைவர் தம்பிஅப்பா(ஜோர்ஜ்)
அவர்களுக்கும் அவரது உறவினர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்கிறோம்.

போராளிகள்.பணியாளர்கள்.
சமாதானச்செயலகம்.பரவிப்பாஞ்சான்.

(சி-11535)

## சாவு அறிவித்தல்

### தர்மசறோஜினி பஞ்சரட்ணம்

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த மெதடிஸ்த மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை தர்மசறோஜினி பஞ்சரட்ணம் 28.02.2005 திங்கட்கிழமை கிளிநொச்சியில் காலமானார். அன்னார் ஓய்வு பெற்ற தபால் அதிபர் பஞ்சரட்ணத்தின் (தம்பியப்பா) மனைவியும், காயத்திரி, காலஞ்சென்ற நிமல், ஆகியோரின் தாயாரும் ஆவார். அன்னாரின் அஞ்சலி நிகழ்வு கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் அமைந்துள்ள ஊடக இணைப்புச் செயலகத்தில் 03.03.2005 வியாழக்கிழமை காலை நடைபெற்று 10.00 மணிக்கு இறுதிக்கிரியைக்காக கிளிநொச்சி திருநகர் பொது மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

தகவல்:—
வே.கு.பஞ்சரட்ணம்,
[கணவர்]

பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி

(சி.11534)

## எரிக்கப்பட்ட இராணுவக் காவலரண் மீண்டும் புனரமைப்பு

யாழ். கண்டி வீதியில் உள்ள கைதடிச்சந்தியில் பொது மக்களால் எரியூட்டி அழிக்கப்பட்ட இராணுவக் காவலரனை ஒன்றைப் புனரமைத்து அதில் படையினர் மீண்டும் நிலைகொண்டுள்ளனர்.

அண்மையில் கௌசல்யன் உட்பட்ட போராளிகளும், நாட்டுப்பற்றாளர் சந்திர நேருவு புனானைப் பகுதியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட மையைக் கண்டித்து யாழ்குடா நாட்டில் இடம் பெற்ற ஹர்த்தாலின்போதே இக்காவலரண் எரியூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (33)

## மண் அகழ்வை தடுக்க நடவடிக்கை எடுக்குக!

அரியாலைப் பகுதியில் படையினரின் ஆதரவுடன் சட்ட விரோத மண் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அரியாலை மத்தி,மற்றும் அதன் சுற்றுப் பிரதேசம், அரசடிப் பகுதி,இளையதம்பி வீதி,பழைய புகையிரதவீதி போன்ற இடங்களிலேயே இந்த மண் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் கடல் நீர் உட்புகும் அபாயமும்,நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாறக்கூடிய நிலைமையும் ஏற்படலாமென பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ் விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொது மக்களால் கோரப்ப ட்டுள்ளது. (28)

# யாழ்.குடாநாடு திரள்கின்றது; இன்று மாபெரும் பேரணி!

(யாழ்ப்பாண செய்தியாளர்)

**யாழ் குடாநாட்டில் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தால் இன்று மாபெரும் கண்டனப்பேரணி நடத்தப்படவுள்ளது. இப் பேரணிக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.**

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்கள் சிறிலங்கா அரசால் நடைமுறைப் படுத்தப்படாததைக் கண்டித்தும், போரினாலும், சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட வரும் சர்வதேச பிரதிநிதிகளை வடகிழக்கிற்குச் செல்லவிடாது தடுக்கும் அரசின் செயலைக் கண்டித்தும், இடைக்கால நிர்வாகத்தை வழங்க மறுப்பதைக் கண்டித்தும் இப்பேரணி நடத்தப்படுகின்றது.

யாழ்.பிரதேச மக்கள் யாழ். இந்துக் கல்லூரியில் ஒன்றுகூடி, அங்கிருந்து கந்தர் மடம் சந்திக்கு வந்து, பிரதான பேரணியில் கலந்து கொள்வர்.

நல்லூர் பிரதேச மக்கள் குமார சுவாமி வீதி வழியாகச் சென்று யாழ் .பல்கலைக்கழகம் முன்னால் உள்ள பலாலி வீதியில் பேரணியுடன் கலந்து கொள்வர்.

வடமராட்சி,தீவகம்,வலிகாமம் பிரதேச மக்கள் யாழ்.. பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடிப் பேரணியில் இணைந்து கொள்வர்.

தென்மராட்சிப் பிரதேச மக்கள் சிவன் அம்மன் வீதியில் ஒன்று கூடி, பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியில் பேரணியுடன் இணைவர்.

மாணவர் அமைப்பினர் பழம் வீதியால் சென்று அரசடி வீதியில் பேரணியுடன் இணைவர்.

பிரதான பேரணி யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து ஆரம்பித்து, பலாலி வீதி ஊடாக கந்தர்மடச் சந்தியால் திரும்பி, அரசடி ஊடாக நல்லூர் பின் வீதியை அடைந்து, அங்கிருந்து கோவில் வீதி ஊடாகச் சென்று, ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்படும்.

தொடர்ந்து கோவில் வீதி ஊடாகச் சென்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மகஜர் கையளிக்கப்படும். .அதைத் தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் மகஜர் கையளிக்கப்படும்.

அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதியைச் சென்றடைந்து, அதனூடாகக் கண்டி வீதி வழியாக யாழ்செயலகத்தினைச் சென்றடைந்து மகஜர் கையளித்து, பிரகடனமும் வாசிக்கப்படும். (27,28,33,41,சு,கா)

-வடமராட்சியில் பேரலையால் சேதமடைந்த-

## பாடசாலைகளைப் புனரமைக்க 96.10 மில்லியன் ரூபா தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 96.10 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் யாழ். வடமராட்சியில் முழுமையாகவும், பகுதியாகவும் சேதமான 14 பாடசாலைகளைப் புனரமைத்து மீள இயக்குவதற்காகவே இந்நிதி தேவைப் படுவதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதுடன், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான ஏனைய வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கவே இந்நிதி தேவைப்படுகின்றது. (33)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் ஒரே நோக்குடனேயே வந்தேன்

- ஜேர்மன் ஹியூமெடிக்கா நிறுவனப் பிரதிநிதி வூல்க்கங்

(பருத்தித்துறை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனே நான் இங்கு வந்தேன் என ஜேர்மன் ஹியூ மெடிக்கா நிறுவனப் பிரதிநிதி வூல்க்கங் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தும்பளை கலப்பனாவத்தையில் சுனாமியால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு ஹியூமெடிக்கா நிறுவனத் தின் உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த மக்களின் அழிவுகளையும், அவலங்களையும் ஜேர்மனியிலிருந்து நான் கணனி மூலம் பார்த்தேன் அப்போதே இவர்களுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அதனாலேயே நான் இங்கு உதவி புரிய வந்தேன்.

இதுவரை இவர்களுக்கு நாம் பகுதியாக படகுகள், இயந்திரங்கள், வலைகள் என்பனவற்றை வழங்கியுள்ளோம். மேலும் 754 படகுகளை வழங்க இருக்கிறோம். எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் இன்பன் கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன், யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் கயல்விழி, யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன்., வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன் உட்பட கடற்றொழிலாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (கா)

## நூல்வெளியீடு

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் "கீரிமலைச் சிவன் கோவில்" எனனும் நூல் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி வெளியிடப் பட்டுள்ளது.

நகுலேஸ்வரர் ஆலய பிரதம குரு ராஜ ராஜி ஸ்ரீ.கு.நகுலேஸ்வரக்குருக்கள் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. நூலுக்கான வெளியீட்டுரையைக் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி நிகழ்த்தினார். (41)

சுனாமி பாதித்த அரச பணியாளர்

## கடன் வசதி பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கவும்

சுனாமியால் பாதிக்கப்பட்ட அரச பணியாளர்களுக்கான கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் கடனுதவிகளைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கத் தவறியவர்கள் தொடர்ந்தும் தமது கடனுதவி கோரல் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாமென சிறிலங்காவின் பொது நிர்வாக அமைச்சு அறிவித்திருக்கிறது.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் அரசபணியாளர்கள் அனைவரும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களூடாக விண்ணப்பிக்க முடியுமென அறிவிவிக்கப்பட்டுள்ளது. (33)

## வல்வெட்டித் துறையில் புனரமைப்புப் பணி

(வல்வெட்டித்துறை)

சுனாமியால் சேதமான யாழ். வல்வெட்டித்துறைப் பிரதேசத்தைப் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளில் "கெயர்" நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

உள்ளூர் தொழிலாளர்களின் மனித வலுவைப் பயன்படுத்தி, இப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருவதுடன் புனரமைப்புப்பணிகளில் ஈடுபடும் உள்ளூர் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 350 ரூபா ஊக்குவிப்புக் கொடுப் பனவுகளையும் வழங்கிவருகிறது.

இப் பணிகளில் சுனாமியால் தமது தொழில் உடமைகளை இழந்து கடற்றொழிலுக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ள கடற்றொழிலாளர்களே ஈடுபட்டு வருகின்றனர். (33)

## மின்விளக்குகளை ஒளிரவிடுக!

யாழ். நல்லூர்க் கந்தன் ஆலயம் தொடக்கம் இராச வீதி வரையுமான கோவில் வீதிப் பகுதியிலும் , அதனைத் தொடர்ந்து உள்ள இராமலிங்கம் வீதிப் பகுதியிலும் இரவு நேர வீதிப் மின் விளக்குகளை ஒளிரவிடுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)





கனடாவிலிருந்து வந்த தாயக மருத்துவக்குழுவினர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை வழங்குகின்றனர் (படப்பிடிப்பு:- ஆன்சலின்)

## மனையியல் கண்காட்சி

(நல்லூர்)

வடக்குக் கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சி புத்தூர் மத்திய சனசமூக நிலைய மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீ.ரி. ஞானசேகரவேல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கண்காட்சியை வலி கிழக்குப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மகேந்திரன் ஆரம்பித்து வைத்தார். (41)

# அரச, அரசசார்பற்ற நிறுவனங்களை எதிர்பாராது

# சுயமாக உழைத்து நாம் முன்னேற வேண்டும்



## -மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி வலியுறுத்து

(மட்டக்களப்பு)

**“மட்டக்களப்பு மாவட்டம் சகல வளம் பொருந்திய மாவட்டம் அது வறுமையில் இருக்கக் கூடாது. அரசாங்கம் செய்யும், அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்யும் என்று எதிர்பார்க்காது நாம் சொந்தக் காலில் முன்னேற வேண்டும்”. இவ்வாறு மட்டு. அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.**

பன்சேனையில் நேற்று முன்தினம் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை திறப்பு விழா நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வருங்காலச் சந்ததி வாழ வேண்டுமென்பதற்காக பதினேழாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளை இழந்திருக்கிறோம். பல நெருக்கடிச் சூழலைச் சந்தித்திருக்கிறோம். அப்போதெல்லாம் கவசமாக இருந்த தமிழீழ மக்கள் என்றும் மதிப்பிற்குரியவர்கள். விடுதலைப் போராட்டம் மக்களுக்காகவே, மக்களின் மேம்பாடு கட்டுமானங்கள் சரியாக நடைபெற வேண்டும். நிர்வாகக் கட்டமைப்பு அலகுகளை விரிவுபடுத்தி அவர்களுக்கு உதவிகள் சென்றடைய வேண்டுமென்பது தலைவரது எண்ணம். இந்த மருத்துவமனையை இங்கு குறுகிய காலத்துக்குள் கட்டி முடிப்பதற்கு இங்குள்ள மக்களின் பலமான சக்தி பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என்பதை காணக் கூடியதாகவிருக்கிறது. கடந்த 1992ம் ஆண்டு காலப் பகுதியில் இப்பிரதேசத்தில் மக்களுடன் இருந்திருக்கிறேன். இன்று அவர்களின் நிலைமைகளை அவதானிக்கும் போது அவர்களது வாழ்க்கையை முன்னேற்ற வேண்டியுள்ளது. எனவே சில திட்டங்களை நடைமுறைப்படுத்தி செயல் வடிவாக்கும் போது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற முடியும். இதனால் வறுமைப் பிடியிலிருந்து மக்கள் மீளமுடியும். இதற்காக பல திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தவுள்ளோம். எனவே நீங்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றார்.

## வீரமுரசு வார நிகழ்வு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வீரமுரசு வாரநிகழ்வு கடந்த ஞாயிறன்று இரவு ஏழு மணியளவில் முத்துஐயன்கட்டு வலது கரை தினேஸ் முன்பள்ளியில் சி.வேதவனம் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்து நிகழ்வையும் ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து முத்துஐயன்கட்டு முத்துவிநாயகர்புரத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதனையடுத்து முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை ஊடகப்பேச்சாளர் சி.வேதவனம், முத்துவிநாயகபுர கிராம அலுவலர் சோமசுந்தரம், இடது கரை அ.த.க.பாடசாலை அதிபர் பாஸ்கரன் ஆகியோர்உரையாற்றினர்.சிறப்புரையை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆற்றினார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம் பெற்றன. இந்நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர். (08,05)

### வழமைதாரருக்கு உதவி

மன்னார் மாவட்டத்தின் அடம்பன் கிராமிய அபிவிருத்தி வங்கி இரு வழமைதாரர்களுக்கு மொத்தம் மூன்று லட்சம் கடனுதவியூடாக இரண்டு சிறிய நெல் அறுவடை செய்யும் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

## வீரவணக்கக் கூட்டமும் நடுகல் திரை நீக்கமும்

(ஒட்டுசுட்டான்)

ஓயாத அலை மூன்றில்(09-05-2000) வீரச்சாவடைந்த வீரவேங்கை ரூபன் (யோசப் விதுரநாத் விநாயகர் வீதி ஈச்சமோட்டை புலிமச்சிநாதகுளம் ஒலுமடு என்ற மாவீரரின் திருவுருவப்படம் கடந்த சனியன்று அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு எடுத்துவரப்பட்டு புலிமச்சிநாத குளம் அ.த.க பாடசாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டமும் நடைபெற்றது.

வீரவணக்க கூட்டம் மாங்குளம் பிரதேசப் பொறுப்பாளர் நாகமைந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுச்சுடரினை புலிமச்சிநாதகுளம் அ.த.க பாடசாலை அதிபர் க.ஜெகதீபன் ஏற்ற, திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை மாவீரரின் தாயார் ஏற்றி மலர் மாலையினை அணிவித்தார். தொடர்ந்து மக்கள் அஞ்சலி செய்தனர். வீரவணக்க உரையினை முல்லை.மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் செ.முகுந்தன், அம்பகாமம் அ.த.க பாடசாலை அதிபர் நாகேந்திரன் ஆகி யோர் ஆற்றியதைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் திருவுருவப் படம் வன்னி விளாங்குளம் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் மாவீரரின் தாயாரினால் நடுகல் திரைநீக்கம் செய்யப்பட்டது. (05)

## மன்னார் இலுப்பைக்கடவைப் பிரதேசத்தில் சிறப்புற நடைபெற்ற வீரமுரசு நிகழ்வு

(மன்னார்)

மன்னார் இலுப்பக்கடவை பிரதேசத்தில் வீரமுரசு நிகழ்வானது நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது. இந்நிகழ்வில் சகல பொது அமைப்புக்கள், சங்கங்கள் என்பவற்றின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு இடம்பெற்று மக்களின் தேவைகள், குறைபாடுகள் கேட்டறிந்தனர். இச்சந்திப்பில் மகளிர் அரசியல் துறை பிரதேசப் பொறுப்பாளர் கவிப்பிரியா, மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கேசவன், காவல் துறைப் பிரதேசப் பொறுப்பாளர் தேவதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு நிகழ்வாக மேடை நிகழ்வுகள் இடம் பெற்றன. பிற்.பகல் 5.30 மணிக்கு தேசியக் கொடியினை பிரதேசப் பொறுப்பாளர் கவிப்பிரியா ஏற்றிவைக்க பொதுச்சுடரினை மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் நிலவரசி ஏற்றிவைத்தார். சிறப்புரையை மன்னார் நகரப் பொறுப்பாளர் கா.முடியரசன் நிகழத்தினார். தொடர்ந்து கலைநிகழ்சிகள் இடம்பெற்றன. இந்நிகழ்விற்கு இலுப்பைக்கடவை கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் சிவகரன் தலைமை தாங்கினார். இறுதியாக கிராம இசைக் குழு நிகழ்ச்சி இடம்பெற்றது.

## குறைந்த செலவில் வீடமைக்கலாம் பார்வையிட்டு பயன்பெற அழைப்பு

(அலுவலகசெய்தியாளர்)

வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் இலங்கைத் தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் குறைந்த செலவில் புதிய தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி ஐந்து வீடுகள் மாதிரியாக கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வீடமைப்பில் பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பம், கட்டுமான வேலைகள், உள்ளீடுகள் போன்ற விடயங்களை துறைசார்ந்தவர்கள் பார்வையிட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் மார்ச் மாதம் ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் சம்பந்தப்பட்டவர்களை உள்ளடக்கி வேலைப் பயிற்சிப் பட்டறை நடாத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இந்த மாதிரித் திட்டம் எமது சூழலிலுள்ள மலிவான பொருட்களைக் கொண்டு தரமான வீடமைக்க முடியுமென செயல் மூலம் நிரூபித்துள்ளது. பொது மக்களில் இதில் ஆர்வமுள்ள எவரும் மேற்படி அறிவியல் நகருக்கு வருகை தந்து இம் மாதிரி வீடுகளைப் பார்வையிட்டு பயன் பெறமுடியும் என கிளி நொச்சி அரச அதிபர் தி.இராச நாயகம் தெரிவித்துள்ளார். (சோ)

## வவுனியா – மன்னார் பிரதான வீதியிலுள்ள சிறிலங்கா ராணுவ முகாம்கள் புனரமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா - மன்னார் பிரதான வீதியிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இவ் வீதியில் எட்டுக்கும் மேற்பட்ட இராணுவ முகாம்கள் உள்ளன. இவை அண்மை நாட்களாக புனரமைக்கப்பட்டு வருகின்றன.

புதிதாக முட்கம்பி வேலிகள், மண் அணைகள்,புதிய இராணுவக் காவலரண்கள் என்பன அமைக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுக் கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் இராணுவத்தினர் இப்பகுதியில் பயிற்சி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்ற மையினையும் அவதானிக்க முடிகிறது. (தீ)

## கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் நான்கு கி.அ. சங்கங்களே பதிவு செய்துள்ளன!

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 42 கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களில் நான்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களே இதுவரை பதிவிற்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமையன்று கிளி.கரைச்சி பிரதேச செயலர் செல்வி.சுலோஜினி தலைமையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் செயலர்களுடனான கலந்துரையாடலின் போது கரைச்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் க.பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

அவர் மே[illegible]ம் தெரிவிக்கையில், மேற்ப[illegible] தேச செயலர் பிரிவிலுள்ள 42 [illegible]ிராம சேவை அலுவலர் பிரிவுகளி[illegible]ள்ள கிராம அபிவிருத்திச் சங்[illegible]களின் மாதர் சங்கங்களில் இதுவரை நான்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 17 மாதர் சங்கங்களுமே பதிவிற்குட்படுத்தப்பட்டுள்ளதெனவும் இதன் காரணமாக பதிவுகளை மேற்கொள்ளாத கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அரசினால் கிடைக்கும் மானியங்களை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் எனவே அனைத்து கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் சங்கங்களும் பதிவுகளை உடன் மேற்கொள்ள ஆவன செய்யும் படிவேண்டியுள்ளார். (சோ)

## வைக்கோலின் பயன்பாட்டை உணர்த்தி விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்ட முயற்சி!

### முல்லை. மாவட்டத்தில் கூட்டு நடவடிக்கை

(உடையார்கட்டு)

வைக்கோலை நெல்வயல்களில் எரியூட்டாமல் அவற்றினை நெல்வயல்களில் இட்டு அதன் மூலம் விவசாயிகள் அதிக நன்மைகளைப் பெறும் வகையில் அவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையொன்று முல்லை. மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் விவசாயத் திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து மக்களுக்கு ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்த முன் வந்துள்ளன.

இதன் மூலம் வைக்கோல் எரிக்கப்படாது அதனை மீளவும் பயன்படுத்தும் முகமாகவும் இதனால் மண்ணின் வளம் மென் மேலும் அதிகரித்து பயிர்களின் விளைச்சலை அதிகரிக்கும் சூழல் உருவாக்கப்படவுள்ளது. இக் கருத்தினை மக்களுக்கு தெளிவு படுத்தும் முகமாக விழிப்பூட்டல் தெருவெளி அரங்கு இம்மாவட்டத்தில் பிரதேச ரீதியாக நடைபெறவுள்ளது. இதன் முதற்கட்ட நிகழ்வு உடையார் கட்டு பகுதியில் நேற்று ஆரம்பமாகியது. தெருவெளி நாடகம் வாயிலாக இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (19)

### வீதி புனரமைப்பு

நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாத ஐந்தாம் கட்டை முதல் தலைமன்னார் வரையிலான வீதி தற்சமயம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் நீண்ட காலமாக கஸ்ரங்களை அனுபவித்து வந்த மக்கள் இலகுவாக போக்குவரத்தை மேற் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. (18)

# எதிர்க்கட்சிகளின் தொடர் போராட்டங்களையடுத்து

# லெபனானின் சிரிய ஆதரவு அரசு பதவி விலகியது



பல நாட்களாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களை யடுத்து லெபனானில் சிரிய ஆதரவிலான அரசு பதவி விலகியது. இந்த மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ள எதிர்க் கட்சியினர்.

(பெய்ரூட்)

**லெபனானில் எதிர்க்கட்சிகளும் பொதுஅமைப்புக்களும் சிரிய ஆதரவு அரசாங்கத்திற்கெதிராக தொடர்ச்சியாக மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களையடுத்து நேற்று அந்நாட்டு அரசாங்கம் பதவி விலகியுள்ளது.**

லெபனானிலுள்ள 15ஆயிரம் சிரியப் படைகளை வெளியேற்றுமாறு கோரி கடந்த இரு வாரங்களாக எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கெதிரான தமது போராட்டங்களை தீவிரப்படுத்தினர். இதன் உச்சக்கட்டமாக நேற்று எதிர்க்கட்சிகள் பொதுஅமைப்புக்கள், பொதுமக்களென சுமார் 25 ஆயிரம் பேர் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அனைத்தையும் முடக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை நடத்தினர். இதனையடுத்து சிரிய ஆதரவு கொண்ட ஓமட்கராமி தலைமையிலான அரசாங்கம் நேற்றுப் பதவி விலகியுள்ளது.

லெபானானின் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரீரி உள்ளிட்ட மூவர் அண்மையில் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தப் படுகொலைகளுக்கு சிரிய பின்னணியில் இருப்பதாகவும், இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் சிரியப்படையிகள் லெபானானை விட்டு வெளியேற்றப்படவேண்டுமெனவும் சிரிய நாட்டு ஆதரவுடன் அமைந்துள்ள அரசாங்கத்தை எதிர்க்கட்சிகள் கோரி வந்ததுடன் தம்முடைய கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பட்டங்களையும் தொடர்ச்சியாக நடத்தி வந்தன. இதன் உச்சக்கட்டமாக நேற்று எதிர்க் கட்சிகளுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தும் முகமாகவும் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் 25 ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். சிவப்பு மற்றும் வெள்ளை நிறக் கொடிகளுடன் வந்த இந்த ஆர்ப்பாட் டக்காரர்கள் சிரியாவின் இராணுவம் வெளியேற வேண்டு மென்றும் தமக்கு லெபனின் இராணுவமே தேவை யென்றும் கோசம் எழுப்பினார்கள். அமைச்சரவையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றும் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலேயே இந்த ஆர்ப்பாட்டங்கள் பெய்ரூட்டில் நடைபெற்றது.

இந்நிலையில்தான், நேற்று சிரிய ஆதரவுடனான லெபனான் அரசாங்கம் பதவி விலகியுள்ளது.

லெபனான் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் அதிருப்தியடைந்து அதன் அமைச்சர்கள் மூன்று பேர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருந்ததும் தெரிந்ததே.

இதேவேளை, முறையான உத்தரவாதம் கிடைத்தால் மாத்திரமே தமது படைகள் லெபனானில் இருந்து வெளியேற முடியுமென சிரிய சனாதிபதி கூறியுள்ளார்.

## போதைப்பொருள் கடத்தி வந்த கொலம்பிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது!

கொலம்பியாவில் போதைப்பொருள் கடத்திவந்த விமானத்தை பெரு நாட்டு இராணுவம் சுட்டுவீழ்த்தியுள்ளது. போதைப்பொருள் உற்பத்தியிலும் போதைப்பொருள் கடத்தலிலும் உலகில் முதல் இடத்தைப்பிடித்து இருக்கும் கொலம்பியாவில் அரசிற்கு எதிராக செயற்பட்டுவரும் கெரில்லா படையினர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

பெரும்பாலும் கடத்தல்காரர்கள் அமெரிக்காவுக்குத்தான் போதைப்பொருட்களைக் கடத்துகிறார்கள். அமெரிக்காவுக்கு இது பெரும் தலைவலியை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் அமெரிக்காவும் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க அயல்நாடான பெருநாட்டின் இராணுவத்துக்கு உதவியளித்ததுடன் பயிற்சியும் அளித்துவருகிறது. இந்தநிலையில் பெருவின் சீசார் மாகாணத்தில் 'சிங் 200' என்ற விமானம் சந்தேகத்துக்கிடமான வகையில் பறந்து சென்றது. இதைப் பார்த்த இராணுவத்தினர் உடனடியாக அதைத்தரை இறங்கும்படி உத்தரவிட்டனர். ஆனால் அதைப்பொருட் படுத்தாமல் அந்த விமானம் தொடர்ந்து சென்றது. இதைத் தொடர்ந்து விமானப்படையினர் அந்த விமானத்தை இன்னொரு விமானத்தில் துரத்திச்சென்று சுட்டுவீழ்த் தினார்கள். அந்தவிமானத்திலிருந்து கொக்காயின் உட்பட ஏராளமான போதைப்பொருட்கள் படையினரால் கைப்பற்றப்பட்டன.



நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து படைகள் குவிக்கப்பட்டுள்ளனர்.

## அல்ஜசீராவுக்குப் போட்டியாக "அல்குரா" தொலைக்காட்சி அலை வரிசை

### அமெரிக்கா ஆரம்பிக்கின்றது

(வோஷிங்டன்)

முஸ்லிம்களுக்கென அல்ஜசீராவுக்குப் போட்டியாக தொலைக்காட்சி அலை வரிசை ஒன்றை அமெரிக்கா ஆரம்பிக்கவுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் வசிக்கின்ற முஸ்லிம்களால்தான் தீவிரவாதம் வளர்கின்றது எனக் கருதியுள்ள அமெரிக்க சனாதிபதி புஷ் 24 மணி நேர சேவையாக இந்த ஒளிபரப்பு நிகழ்சிகளை தொடங்கி வைக்கத் திட்டமிட்டுள்ளார்.

இது கட்டாரில் இருந்து ஒலிபரப்பாகும் அல்ஜசீரா தொலைக்காட்சிக்குப் போட்டியாக இருக்கும் என்றும் கூறப்படுகின்றது. இந்த அலைவரிசைக்கு "அல்குரான்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதற்குப் 17 இலட்சத்து 50 ஆயிரம் டொலர் செலவாகுமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஐரோப்பாவிலுள்ள ஒரு கோடியே பத்து லட்சம் முஸ்லிம்களுக்கு இந்த அலைவரிசையூடாக நிகழ்ச்சிகள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## போப் ஆண்டவரின் உடல் நிலை தேறி வருகிறது

தொண்டையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போப் ஆண்டவர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் உடல் நிலை தேறி வருகிறது.

கத்தோலிக்க மதத் தலைவர் போப் ஆண்டவர் மூச்சுத் திணறல், புளூ காய்ச்சல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ரோம் நகரில் உள்ள ஜெர்மிலி வைத்தியசாலையில் கடந்த சில நாட்களுக்கு முன் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தொண்டையில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. குரல் வளையில் இருந்து நுரையீரலுக்குத் தனியாக ஒரு குழாய் பொருத்தும் டிரோக்கி யோடமி' சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. போப் ஆண்டவர் இன்னும் வைத்தியசாலையிலேயே தங்கி இருக்கிறார். சத்திரசிகிச்சைக்குப் பின்னர். அவரது உடல் நிலை தேறி வருகிறது. என்றாலும் சரளமாகப் பேசுவதற்கு சிரமப்படுகிறார். அவருக்குக் கொஞ்சம் கொஞ்சமாக பேச்சுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதை வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் ஜோக்குயின் நவாரோ தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை போப் ஆண்டவருக்கு பதில் அவரது உதவியாளர் ஒருவர் தான் பீட்டர்ஸ் தேவாலயத்தில் சிறப்புப் பிரார்த்தனை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. போப் ஆண்டவர் இப்போது படுக்கையில் இருந்து எழுந்து நாற்காலியில் தானாக உட்காருகிறார். சாப்பிடுகிறார் அவரது உடல் நிலை நாளுக்கு நாள் தேறி வருகிறது என்று மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



இந்தோனேசியாவில் எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது டயர்கள் எரிக்கப்படுவதைக் காணலாம்.



அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்த இளவரசர் சார்ள்ஸ் பிரிமண்டிலில் அருங்காட்சியகத்திற்குச் சென்ற வேளை.



மூன்று நாட்களுக்கு முன்பு சீனாவின் ஹிபேயில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட இரட்டைக் குழந்தைகளை வைத்தியசாலைத் தாதி ஒருவர் நீராட்டுகிறார்.

**சுனாமி** அடித்த சமயம் நான் முல்லைத்தீவுப்பகுதியில் இருக்கவில்லை. எனது கடமை நிமித்தம் புதுக்குடியிருப்புக்குப் போயிருந்தேன். காலை 9.00 மணி இருக்கும் எங்களது முகாமில் இருந்து " முல்லைத்தீவு முழுக்க வெள்ளம் வந்து விட்டது சனம் எல்லாம் செத்துப்போச்சுது கள் உடன எங்க ளுக்கு ஆக்களை அனுப் புங்கோ" எண்டு தகவல் அனுப்பியிருந் தார்கள்.

அந்தத்தகவல் எனக்குக்கிடைத்த சமயம் புதுக்குடியிருப்பில் மழைபெய்து கொண் டிருந்தது. இந்தமழைக்கு எப்படி வெள் ளம் வந்தது என்னால் நம்பவே முடிய வில்லை. மீண்டும் தொடர்பெடுத்து சம்பவத்தைக் கேட்டேன். அவர்கள் அதையே இன்னும் உரப்பாகச்சொன்னார் கள். அதன்பிறகு தான் நான் முல்லைத்தீ வுக்கு வேகமாகப் புறப்பட்டு வந்தேன்.

புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு வர சனக்குவியலாக இருந்தது. அரைகுறை ஆடைகளுடன் அலங்கோலமானநிலையில் காயங்களுடன் கதறி அழுது கொண்டிருந் தார்கள். அவர்களைப்பார்க்கவே பயங் கரமாய் இருந்தது. என்ன இப்படி வெள்ளம் வந்ததா? அதிலிருந்து இவர்களால் தப்பமுடியாமல் போனதோ? என்று எனக்குள் நினைத்துக்கொண்டு முல்லைத் தீவு நோக்கிய பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தேன்.

கெடுத்துக் கொண்டிருக்கின்ற பொழுது பலர் தங்கள் உறவுகளைத் தேடி வந்து அந்த இடத்தில் இருந்த சடலங்களுக்குள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இப்படி இருக்க உழவு இயந்திரம் ஒன்று சடலங்களை நிறைத்தபடி அந்த இடத்திற்கு வந்து நின்றது. அவற்றை நாங்கள் இறக்கிக் கொண்டிருந்தோம். ஒரு ஆறு வயது மதிக்கத்தக்க சின்னத் தம்பி ஒருவரின் சடலம் என்னைத் தூக்குங்கள் என்கின்ற மாதிரி கையை உயர்த்திய படி இருந்தது.

அந்தச் சிறுவனின் சடலத்தை நாங்கள் தூக்க ஒரு அப்பா வந்து "ஐயோ! இது என்ர பிள்ளை" எண்டு கதறி அழுது சடலமாய் கிடந்த தனது மகனைத் தூக்கி கட்டியணைத்து அழுது புலம்பிக் கொண்டிருந்தார். அந்தக் காட்சியை நேரடியாகக் கண்ணால் பார்க்கின்ற போது மனம் வெதும்பியது. என்ன செய்வது என்றே தெரியாமல் இருந் தது. அந்தளவுக்கு ஒவ்வொரு சம்பவமும் மனதை உலுப்பிக் கொண்டிருந்தது.

இளம் வயதினரின் சடலங்களையும், சிறுவர்கள் குழந்தைகளின் சடலங்களையும் எங்களை அரவணைத்து வளர்த்த உறவுகளை சடலமாக அந்த இடத்தில் இருந்து ஏற்றி அனுப்பி இருந்தோம்.

அப்படியே அன்றைய பொழுது கழிந்து போய் விட்டது. அடுத்த நாள் 28ஆம் திகதி காலையில் இருந்து தீத்தக்கரையில் இருந்து நிதர்சன் வீதி வரையாக 1500 மீற்றர் கடற்கரைப் பகுதியை கிளியர் பண்ணுமாறு கூறப்பட்டது. நாங்கள் எத்தினை தடவை போய் வந்தஇடம் அதை எங்களால கூட மட்டுப் பிடிக்க ஏலாமல் இருந்தது. அந்தளவுக்கு இடத்தின் தோற்றமே மாறியிருந்தது.

கள்ளப்பாட்டு கடற்கரைக்கு கிட்டவாக வந்து கொண்டிருக்கேக்குள்ள கடற்கரையில வெள்ளக்காறன் ஒருத்தன் படுத்திருப்பது போலத் தெரிந்தது. அதைப் பார்க்க எங்களுக்கு வியப்பாக இருந்தது. எத்தனை ஆயிரம் அப்பாவிகள் உயிர்களை குடித்து ஏப்பம் விட்டுக் கொண்டிருந்த கடல் கரையில் மரண பயம் ஓயும் முன்னரே இந்த வெள்ளைக்காரன் ஏன் இப்படி வந்து உல்லாசம் அனுபவிக் கிறான் அதை நினைக்க ஒருபக்கத்தில் ஆத்திரமும் மறுபக்கத்தில் வியப்புமாக மாறிமாறி வந்து கொண்டிருந்தது.

விட்டது. அந்தளவுக்கு மோசமாக பழுதடைந்து விட்டது. அதனால் அந்த இடத்திலேயே தகனம் செய்து விட்டோம். எங்களுக்கு சடலங்களை எரித்து பழக்கம் இல்லை. இது தான் முதல் தடவை. ஒவ்வொரு சடலத்தையும் முழுமையாக எரித்தோம்.

ஒவ்வொரு சடலங்களை எரிக்கின்ற பொழுதும் எங்களது பெண் போராளிகள் "யாருடைய அம்மாவோ அப்பாவோ தெரியாது நாங்கள்கொள்ளி வைக்கிறோம்" என்று சொல்லி வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்படியே பல உடல்களை அந்தப் பகுதியில் மீட்டு அடக்கம் செய்தோம் .

இப்படியே ஒவ்வொரு பற்றைகள், மரங்கள், இடிபாடுகள் எல்லாவற்றையும் தேடிப்பார்த்துக் கொண்டிருக்க நாய் ஒன்று பனைமரத்தடியில் நின்றுஅங்கும்



**சுனாமி அலைகளின் கோரவிளையாட்டால் உருக்குலைந்து போன மூல்லை நகரில் சடலங்களை மீட்டெடுக்கின்ற சிரமமான பணியில் ஈடுபட்டிருந்த தமிழீழக் கடற்படை மகளிர் பிரிவுப் போராளி ஆனதி தனது அனுபவத்தை பகிர் கிறார்.**

**பகுதி-31**



# வெள்ளைக்காரன் படுத்திருப்பது போல கடற்கரையில் சடலம் ஒன்று இருந்தது

வழிவழியே காண்கின்ற ஒவ்வொரு வரையும் பார்க்கின்ற பொழுது முல்லைத் தீவின் நிலையை என்னால் அறியமுடிந்தது. ஒருவாறு முல்லைத்தீவைச் சென்றடைந் தோம். அங்கு சென்று மீட்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபொழுது நான் வேறொருவேலைக்காக அவசரமாக செல்லவேண்டி இருந்தது. அதனால் அங்கிருந்துபோய் மறுநாள் காலை மீண்டும் மீட்பு நடவடிக்கைக்காக நான் முல்லைத் தீவுக்கு வந்து பணியை ஆரம்பித்தேன்.

முல்லைத்தீவுப்பகுதியில் இருந்து மீட்கப்படுகின்ற சடலங்கள் எல்லாம் உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டு முல்லைத்தீவு 'றவுண்டப்போட்' சந்திக்குத்தான் கொண்டு வந்து இறக்கினார்கள். அதிலிருந்து முள்ளியவளை, புதுக்குடியிருப்பு என பிறிச்சுப்பிறிச்சு வேறுவாகனங்களில் ஏற்றி அனுப்பினார்கள். இப்படி வருகின்ற உடல்களை கணக்கெடுத்து ஏற்றி அனுப்புகின்ற வேலைதான் எங்களுக்குத் தரப்பட்டது.

ஒவ்வொரு சடலத்தையும் கணக் கெடுத்து ஒவ்வொன்றாய் ஏத்தி அனுப்பிக் கொண்டிருந்தோம். ஒவ்வொரு சடலமும்ஒவ்வொரு நிலையில் இருந்தது பெண்கள், சிறுவர், சிறுமியரின் சடலங்கள் தான் அதிகமாய் இருந்தன.

ஒவ்வொரு குழந்தையின் சடலத்தைப் பார்க்கின்ற போதும் எங்கள் கண் கள் கலங்கின மனம் வெம்பியது. குழந்தை களை தூக்குவதற்கு முற்படும் பொழுது அவர்கள் தமது கைகளை லேசாகத் தூக்கி வைத் திருப்பார் களே அது போலத் தான் ஒவ்வொரு குழந்தையின் சடலமும் எங்களைத் தூக்குங்கள் என்பது போல சைகை காட்டியவாறு கிடந்தன.

இப்படியே ஒவ்வொன்றாய் கணக்



பார்க்கின்ற பொழுது முல்லைத்தீவைக் கட்டி வளர்க்க எதிர்காலச் சந்ததியே இல்லை என்று தான் நினைத்தேன்.

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

அந்தளவுக்கு எங்கள் இளம் வர்க்கம் எல்லாமே சடலங்களாக அந்தச் சந்தியில் உறங்கிக் கொண்டிருந்தினம்.

முல்லைத்தீவு 'றவுண்டப்போட்' சந்தியில எத்தின தரம் சுத்தி வந்த ஆக் கள் எல்லாரும் அசை வில்லாமல் சடலமாய் படுத்திருப்பதைப் பார்க்க மனம் பொறுக்கவே இல்லை. அந்தளவு வேதனை யாய் இருந்தது. அன்று முழு வதும் (27ஆம் திகதி) நானூறு பேருக்கும் அதிகமான

அந்த வெள்ளைக்காரன் படுத்திருந்த இடத்துக்குப் போனோம் அதற்கு மிகவும் அருகில் போகின்ற பொழுது அந்தவெள் ளைக்கார உடல் ஆட்டம் அசைவில்லாமல் இருந்தது. ஒரு கட்டத்தில் அது உயிரில்லாத வெள்ளைக்கார உடலைகரை ஒதுக்கி இருக் கிறதோஎனயோசித்தேன் எல்லாமே குழப்ப மாக இருந் தது.

எதற்கும் கிட்ட நெருங்கிச் சென்று பார்த் தோம் திகைத்துப் போய் விட்டோம். எங்கள் உறவுகளில் ஒருவரின் உடல் தான் கடலுக்குள் இருந்து தோல்கள் உரிந்து போய் வெள்ளை நிறமாக அழுகிய நிலையில் இருந்தது.

அந்த உடலைத் தூக்க முடியாமல் போய்

இங்குமாகத் திரிந்து கொண்டிருந்தது. அந்த இடத்தில் சடலங்கள் ஏதாவது இருக்கலாம் என்ற சந்தேகம் எங்களுக்கு வந்தது உடனடியாக அங்கே போய் பார்த்தோம்.

ஒரு சிறிய பனை வடலிக்குள்

**அ.லோகீசன்**

செருகுப்பட்டபடி எட்டு வயது மதிக்கத்தக்க ஒரு பொம்பிளைப் பிள்ளை ஊதிப் பெருத் துப் போய் இருந்தது. அந்தப் பிள்ளை யின்ர கழுத் தில கையில எல் லாம் நிறைய நகையள் இருந்தது. அதால நாங் கள் அந்த உட லை தகனம் செய்யேல்ல நகையை வைச்சா வதுயாருடைய பிள்ளை என்பதை உறுதிப் படுத்தலாம் என்பதற்காக சம்பவத்தை அறிவித்தோம்

நாங்கள் அறிவித்த சிறிது நேரத்தில் அந்தப் பகுதி கிராம சேவகர் வந்து பார்த் தார். அவராலும் இனம் காணமுடியவில்லை. அந்தப் பிள்ளையின் உடலில் இருந்த நகை கள் எதையும் எடுக்காமல் அப்படியே அடக்கம் செய்தோம் என்று தனது மீட்பு அனுபவத்தைக் கூறினார் அந்தப் போராளி.

சுனாமிக்கடல் பேரலைகள் முல்லைத்தீவில் கோரத்தை ஏற்படுத்திய சிறிது நேரத்தில் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்று அழிவுகளைப் பார்வையிட்டதுடன் மீட்பு நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்கள் அழிவுகள் பற்றியும், தனது மீட்பு அனுபவங்கள் பற்றியும், அந்த மக்களின் மன உணர்வுகள் பற்றியும், அரச உதவிகள் எந்தளவில் கிடைத்தன என்பன உள்ளிட்ட பல்வேறு விடயங்களைப்பகிர்ந்து கொண்டார். அவர் பகிர்ந்தவற்றை எமது அடுத்த பகுதியில் தருகிறோம்.

தொடரும்....

# 21.02.2005-27.02.2005

**21.**


* மன்னார் தாழ்வுப்பாட்டுப் பகுதியில் மாணவன் ஒருவன் சிறிலங்காப்பொலிஸ் உத்தியோகத்தரால் பாலியல் துஸ்பிர யோகத்திற்கு உட்படுத்தப்பட்டதைக் கண்டித்து மன்னாரில் மௌன ஊர்வலம் இடம்பெற்றதுடன் சனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு.

* மன்னாரில் இளைஞனை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தர் அடையாளம் காணப் பட்டார்.

*அமெரிக்க முன்னாள் சனாதிபதிகள் இருவரும் தென்பகுதிக்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர்.



* சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 175 வீடுகளை அமைத்துக்கொடுப்பதாக ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் மனிபால் பெர்னாண்டோ சுயில் கிளியில் விளையாட்டுத்துறை பொறுப்பா ளரைச்சந்தித்த போது தெரிவிப்பு.



* யாழ்ப்பாணத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் உயர்தொழில் நுட்பக்கல்லூரியில் அமைக்கப்பட்ட கட்டடம் திறப்பு.


* ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப் பிற்கும் அபிவிருத்திக்குமான அமைச் சரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்தனர்.

* எம்பிலிப்பிட்டிய நீதிமன்றில் கைக்குண் டுத் தாக்குதலில் மூன்று பேர் பலி.

* அம்பாறையில் தம்பட்டைத்திடலில் புனர்வாழ்வுக்கழகத்தினால் கட்டப்பட்ட தற்காலிக வீட்டுத்திட்டம் திறப்பு.

**22.**

* அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரை நோர்வே விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் சந்திப்பு பின்னர் செய்தியாளர்களிடம் அரசியல் துறைப்பொறுப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்; படையினரால் படுகொலைகளை, ஆயுதக்குழுக்களைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் எமது பகுதிகளில் இருந்து வெளியேறி மக்களை நிம்மதியாக வாழவிடவேண்டு மென தெரிவிப்பு.



* ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட் சிகிழக் குப் பகுதிகளை நோர்வேயின் விசேடதூதுவர் எரிக் சூல்ஹெய்ம் பார்வையிட்டார்.



* ஜேர்மன் அமைச்சர் வியெஸ்ஸோ றெக்சியாஸி சுனாமியால் பாதிக்கப்பட்ட மணற்காட்டு பகுதிக்கு விஜயம்.

* சுனாமி நிவாரணத்திற்கு பொதுக்கட்ட மைப்பு உருவாக்கப்படுவது குறித்து அரசியல்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பில் ஆராய்ந்தோம் என நோர்வே விசேடதூதுவர் எரிக்சூல்ஹெய்ம் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.

* இன்னுமொரு யுத்தம் வருமானால் நாம் அனைவரும் அழிக்கப்பட்டுவிடுவோம் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூன்றாண்டு நிறைவை யொட்டி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிப்பு.

* சமாதானத்தை மலரச்செய்ய மக்களின் உந்துசக்தி அவசியம் என எரிக் சூல்ஹெய்ம் போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு மூன்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் தெரிவிப்பு.

**23.**

* கிளாலி சூனியப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தின் போது சிறிலங்கா இராணுவச்சிப்பாய் கொல்லப் பட்டார்.


* வட-கிழக்கு உளவளத்துணை கட்ட மைப்புக் கூட்டம் கிளி.யில் உள்ள வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது சுனாமியால் உளவளம் பாதிப்படைந்தோருக்கு எவ்வா றான ஆலோசனைகள் வழங்குவது என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்ட துடன், இவ்வேலைத்திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்கு மாவட்ட ரீதியாக பிரதிநிதிகள் தெரிவு.



* நோர்வேயின் விசேடத்தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் கொழும்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமும் சந்திப்பு.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட 32 யாழ். பல்கலை மாணவர்களுக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பின ருடன் சேர்ந்து நிதி உதவி வழங்கல்.

* நாட்டுப்பற் றாளா வே.க. ஏரம்பு ஐயா கால மானார்.



* சுனாமியால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவு தொகையும், ஈருருளி வழங்கும் நிகழ்வும் முல்லைத்தீவில் இடம்பெற்றது.



**24.**

* கிளாலியில் சிப்பாய் மீதான தாக்குதல் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை விடுத்துள்ள அறிக்கையில் போராளிகள் மீது குறிவைக்கப்பட்ட போதே தற்காப்புத் தாக்குதல் நடாத்தப்பட்டதென தெரிவிப்பு.




* சமாதானப் பேச்சுவார்த்தைகள் மற்றும் சுனாமி சுனாமி நிவாரண நடவடிக்கை களில் புறக்கணிப்பு என்பனவற்றைக் கண்டித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் பாராளுமன்ற வளாகத்தினுள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.



* அரச உதவிகள் பாரபட்சமின்றி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை முன் வைத்து மருதமுனையிலிருந்து சாய்ந்த மருதுவரை மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

* புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் கைய ளித்தால் அரசுக்கு வழங்கும் ஆதரவினை ஜே.வி.பி விலக்கிக் கொள்ளுமென ஜே.வி.பியின் பிரச்சாரம் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.




* ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தில் இடம்பெற்றிருந்த இ.தொ.கா அமைச்சர்கள் இருவரும் இராஜினாமாக் கடிதங்களை பிரதமரிடம் கையளித்தனர்.

* நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல் கெய்ம் சனாதிபதி சந்திரிகாவையும் பிரதமர் மகிந்தராஜபக்ஷவையும் சந்தித்தார். இதன் போது சனாதிபதி, இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கும் துணைப்படை என்று எதுவும் இல்லையெ தெரிவிப்பு.

* வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் இந்தியா பயணம்.



**25**

* ஐ.ம.சு.மு அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை இ.தொ.கா ஆதரவு விலக்கு வதாக அறிவிப்பு. இதனையடுத்து கொழும்பு பங்குச் சந்தையில் வீழ்ச்சி.

* அம்பாறை ஆலையடி வேம்பப் பகுதி யில் கிராம சேவகரால் பதுக்கப்பட்டிருந்த நிவாரணப் பொருட்கள் மக்களால் மீட்பு.



**26.**

* அம்பாறையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வை யிடுவதற்கு நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் விஜயம், இவருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங் களில் படையினர் நிலைகொண்டிருப்பது குறித்து விடுதலைப்புலிகள் சுட்டிக் காட்டினர்.




* இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் மந்திகை மருத்துவமனைக்கு விஜயம் இதன்போது செய்திகளைச் சேகரிக்கச் சென்ற இருவர் மீது படையினர் தாக்குதல்.



**27.**

* நாட்டுப்பற்றாளர் ஏரம்பு ஐயாவின் புகழுடல் தீயுடன் சங்கமம். முன்னதாக அரசறிவியல் கல்லூரியில் இவரது புகழுடலுக்கு தளபதிகள், பொறுப்பாளர் கள் போராளிகள், உற்றார், உறவினர்கள். பொதுமக்கள் எனப் பலர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

* கண்டிக்கு விஜயம் செய்த நோர்வே விசேட தூதுவர் எரிக் மல்வத்த பீடாதி பதி, அஸ்கிரிய பீடாபதிகளுடன் சந்தித்து கலந்துரையாடினார்.



# அரசியல் கட்சிகள் ஒன்றுபடும் வரை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வாய்ப்பில்லை

## - நோர்வேயின் விசேட தூதுவர் கருத்து

இலங்கையில் கருத்து வேற்றுமைகளினால் பிளவுபட்டிருக்கும் அரசியல் கட்சிகள் ஒன்றுபடும் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான வாய்ப்பு இல்லை என நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சூல்ஹெய்ம் கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் இவர் இதுபற்றி மேலும் கருத்து தெரிவிக்கையில், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சு வார்த்தை இடம்பெறாது விட்டால் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. இரு தரப்பினருக்கு மிடையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குரிய சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பது மட்டுமே நோர்வேயின் பொறுப்பு. எந்தவொரு தீர்மானத் தையும் எவர்மீதும் வற்புறுத்த முடியாது. விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள தன்னாட்சி அதிகார சபை யோசனையை சிறிலங்கா அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளோம். இதுபற்றி சிறிலங்கா அரசாங்கம் தான் தீர்மானிக்கவேண்டும் என்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டிக்கு விஜயம் செய்த எரிக் சூல் ஹெய்ம் அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீடாதிபதிகளை சந்தித்தார். இதன் பின்பு தலதா மாளிகைக்கு விஜயம் செய்து தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்னவையும் அவர் சந்தித்துள்ளார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளை எரிக் சூல்ஹெய்ம் சந்தித்து தற்போதைய நிலை குறித்து விளக்கியுள்ளார். யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பில் நோர்வே தரப்பு மீதும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழு மீதும் சிங்கள மக்கள் சந்தேகம் கொள்ள ஆரம்பித்திருப்பதாகவும் இவர்கள் விடுதலைப்புலிகளுக்கு சார்பாக செயற்பட்டு வருவதான தோற்றப்பாடுகள் ஏற்படுவதாகவும் பௌத்த பீடாதிபதிகள் நோர்வே தூதுவருக்கு சுட்டிக்காட்டியுள்ளனர். யுத்தநிறுத்த ஒப்பந்தம் இரு தரப்பினாலும் மீறப்பட்டு வருவதாக குறிப்பிட்ட நோர்வேத் தூதுவர் ஆனால் நோர்வே தரப்பு அவர்களைத் தண்டிக்க முடியாது என்றும் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளார். அனைத்து தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றை விரைவாகப் பெற்றுக் கொடுக்குமாறு நோர்வே சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்மிடம் பௌத்த பீடாதிபதிகள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் இணக்கப்பாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் இதன் மூலமே சமாதானமுயற்சிகளைத் தொடர முடியும் என்றும் பௌத்த பீடாதிபதிகள் வலியுறுத்தியுள்ளனர்.(32)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு வாகனங்கள் இறக்குமதி

புதிதாகப் பதவி உயர்வுகள் பெற்ற பொலிஸ் பரிசோதகர்கள், உப பரிசோதகர்கள் பாவிப்பதற்காக 100 நவீனரக மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கு 10 கோடி ரூபா நிதி சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளதென பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். வெகு விரைவில் இக்கார்கள் இறக்குமதி செய்யப்பட்டு புதிதாக பதவி உயர்வுகள் பெற்றவர்களுக்கு வழங்கப்படும்.

## முக்கிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டுக்கு முன்பு உமையாள்புரம் [ஆனையிறவு] கிராமத்தில் வசித்த மக்கள் யாரேனும் மீளக்குடியேற விரும்பினால் உடனடியாக என்னைத் தொடர்பு கொள்ளவும்.

கிராம சேவையாளர்,
உமையாள்புரம்,
ஆனையிறவு

(5756)

# இ.தொ.கா.அமைச்சர்கள் பதவி விலகலை மீளப்பெற்றனர்

## -அரசில் தொடர்ந்து அங்கம் வகிக்கவும் முடிவு

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அமைச்சர்கள் இருவரும் தமது இராஜினாமாவை திருப்பிப்பெற்றதுடன், தொழிலாளர் காங்கிரஸ் தொடர்ந்தும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாகவும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்று முன்தினம் கட்சித் தலைவர்கள் சந்தித்து உரையாடியதை அடுத்து, அவர்கள் தமது கட்சி தொடர்ந்தும் கூட்டணி அரசில் நீடிக்கும் என அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இக்கட்சியின் மூத்த துணைத்தலைவரான யோகராஜன் செய்தி ஊடகம் ஒன்றிற்குக் கூறுகையில்; இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பதின்நான்கு அம்சத்திட்டத்தை முன்வைத்துத் தான் அரசாங்கத்துடன் சேர்ந்தது. இந்தப் பதின்நான்கு அம்சத்திட்டத்தை செயற்படுத்துவதில் ஏற்பட்டகால தாமதம் காரணமாகவே தமது அமைச்சர்கள் இராஜினாமாச்செய்ததாகவும் தற்போது சனாதிபதி அதனை அமுல்படுத்துதற்கு ஒத்துக் கொண்டதுடன் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற சில விடயங்களை செயற்படுத்துவதற்கும் சனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## தேடுகின்றோம்

### திரு.சண்முகம்

வாழைத்தோட்டம்,முகாவில் வீதி, இயக்கச்சி.என்னும் இடத்தில் அமைந்துள்ள அம்மன் ஆலயத்திற்குப் பூசை செய்து வந்த திரு.சண்முகம் என்பவரைத் தேடுகின்றோம். அவர் எங்கிருந்தாலும் உடன் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக இயக்குனர்,
புறமோட்டோர்ஸ் என்ஜினியரிங்,
கம்பனி லிமிட்டட்,
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தொ.இல:222 5780 (சி.11370)


## விசேட விலைக்கழிவு

எமது நிறுவனத்தில் ஒரே தடவையில்
பெருமளவு புகைப்படச் சுருள்களை
பிரதி ஆக்கம் செய்வோருக்கு

~~4R-12.50~~ 4R-8.75

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்

யாழ்வீதி, மானிப்பாய்.
T.P: Fax:-021-222-2884

(சி-11512)


## கணுக்கேணிக்குளம், பனங்காமம்குளம் கமக்காரர்கட்கான

## அறிவித்தல்

முல்லைத்தீவு கச்சேரியில் 22-02.2005 நடந்த மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் கணுக்கேணிக்குளம் CAARP திட்டத்தின்கீழ் உடனடியாக புனரமைக்கப்பட உள்ளதாலும், பனங்காமம்குளம் NEIAP திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படும் மிகுதி வேலைகள் உடனடியாக முடிக்க வேண்டியுள்ளதாலும் பெரும்போக வேளாண்மை அறுவடை முடிந்தவுடன் துருசுகள் திறக்கப்பட்டு குளம் வெறுமையாக்கப்பட வேண்டும் எனத்தீர்மானிக்கப்பட்டது.

எனவே இவ்விரு நீர்ப்பாசனத்திட்டங்களின் கீழ் உள்ள கமக்காரர்கள் அனைவரும் இம்முறைசிறுபோகம் செய்யாது முறையே நீர்ப்பாசனப் பொறியியலாளர் முத்தையன்கட்டு, நீர்ப்பாசனப் பொறியியலாளர் வவுனிக்குளம், பிரிவினரால் நடைமுறைப்படுத்தப்படும் இவ்விரு வேலைகளையும் உரியமுறையில் நடைமுறைப்படுத்த உதவும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி. எஸ்.எஸ். சிவகுமார்,
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரும்
பிரதி திட்டப்பணிப்பாளர், NEIAP
முல்லை மாவட்டம்.

(சி-11355)

## மாணவர்படை முதல் மாவீரன் வீரவேங்கை

## அனுதன் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 23.10.1983 தாயக மண்ணில் 02.03.2000

தாய் மடியை விட்டுச்சென்ற தமிழ் மகனே
தாயக மண்ணில் உடல் விதைத்த மாவீரனே
மரணம், ஜனனம்மாறி மாறி வரினும் உன்முகம்
தாயக மண்ணில் இன்னொருமுறை வருமோ?

2005.03.02 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள், அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்:
அப்பா J.P நடராசா, அம்மா நகுலேஸ்வரி, அண்ணாமார், அக்காமார், அத்தான்மார், அண்ணி, தங்கைமார், தம்பிமார், சித்திமார், சித்தப்பாமார், பெரியம்மார், பெரியப்பாமார், அம்மம்மா

167,ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(5755)

# மத்திய அரசின் வரவு-செலவுத்திட்டத்தில் ஆக்க பூர்வமான செயற்திட்டங்கள் இல்லை!

## -தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா விசனம்

(சென்னை)

மத்திய அரசினால் வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் எதுவித புதிய உட்சேர்க்கைகளுமில்லாது பழைய திட்டங்களுக்கு மறுபெயரிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அதிருப்தியுடன் கூடிய விமர்சனம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நிதி தொடர்பான பொறுப்புக்களையும் , வரவு-செலவுத்திட்ட நிர்வாக விதி முறைகளையும் கடந்த வரவு-செலவுத் திட்டம் பின்பற்றவில்லை என்பதை ஒப்புக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடையவில்லை என்று கூறிய நிதியமைச்சர் சிதம்பரம் அதைத் தற்போது 2005/2006 ஆம் ஆண்டுக்காக மாற்றியமைத்துள்ளார் எனவும் கூறிய அவர் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு என்ன சொல்கிறதோ அதை மத்திய அரசும் செய்யவேண்டும் சட்ட அமுலாக்கம் பற்றி மிகப் பெரிதாகப் பேசப்பட்டது ஆனால் அதற்கானநிதி சிறிதளவே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அளவு நிதியைக் கொண்டு வேலைத திட்டங்களை எப்படி முன்னெடுக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

தமிழகத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக மதிய உணவுத் திட்டம் அமுலில் இருந்து வருகிறது இந்த நிலையில் மொத்தச் செலவில் ஒருபகுதியை மட்டும் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது வேடிக்கையாகவுள்ளது எனத் தெரிவித்த தமிழக முதல்வர் செலவுப் பங்கீடு உட்பட பல விடயங்களில் அதிகமான சுமை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவித்துள்ளார்.

# இந்.மத்திய அரசின் 2005/2006ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் லோக்சபாவில் சமர்ப்பிப்பு

இந்தியாவின் பொது வரவு -செலவுத்திட்டம் நேற்று முன்தினம் லோக்சபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2005/2006 ஆகிய ஆண்டுக்கான பொது வரவு -செலவுத்திட்டத்தை நிதியமைச்சர் ப.சிதம்பரம் பாராளுமன்றத்திலே சமர்ப்பித்துள்ளார். பல்வேறு நிதித்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளையும், விசேட நிதி ஒதுக் கீடுகளையும் உள்ளடக்கியதாக இது அமைந்திருக்கிறது. இவற்றிலே விசேடமாக தாழ்த்தப்பட்ட பழங்குடியினரின் வாழ்க்கை மேம் பாட்டிற்கென ரூபா 6281 கோடியும், பல்வேறு திட்டங்களுக்காகவும், அனைவருக்கும் கல்வி எனும் திட்டத்திற்காக ரூபா 7156 கோடியும், பொது சுகாதாரத் துறைக்காகவென ரூபா 10280 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்-2005

எமது பாடசாலையின் பொதுக் கூட்டம் கீழே குறிப்பிடும் தினத்தில் நடைபெறவுள்ளது. தவறாது உரிய நேரத்தில் சமுகம் தருவதுடன் தங்களுக்குத் தெரிந்த எமது பழைய மாணவர்களையும் அழைத்து வந்து எமது சங்கத்தை வலுப்படுத்த உதவவும்.

இடம்:- பாடசாலை மண்டபம்
காலம்:- 02.03.2005
நேரம்:- மாலை 4.30 மணி

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
மு/ உடையார்கட்டு ம.வி

(5757)

## ஆழிப் பேரலையில் ஆகுதியாகிய எம் உறவுகளின் 67 ஆம் நாள் நீங்காத நினைவில்



சிறிகரன் கீர்த்தனா மலர்வு 29.07.1999
சிறிகரன் நவசுஜிதா மலர்வு 09.05.1983



நா.நாகசோதி மலர்வு 14.02.1964



சபாபதிப்பிள்ளை இராசபாக்கியம் மலர்வு 12.06.1939
திருப்பதிநாதன் நிறைஞ்சனா மலர்வு 16.12.1995

காலமெல்லாம் எம்மோடு
களிப்புடனே உறவாடி
அண்ணன் எனக்கு அன்னம் தந்து
அலையோடு அஸ்தமித்துவிட்ட
அன்புத் தங்கையே!

உன் அண்ணன் எனக்கு உதவியாய் நீயிருந்தது உயிர்வாழ்ந்த உன்னை அந்த அலைக்குப் பிடிக்கவில்லையம்மா. படைத்தவனே பறித்துவிட்டான். பாவியாய் நாம் என்ன செய்ய . உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இவர்களுடன் ஆழிப்பேரலையின் கோரப்பிடியில் சிக்கி உயிர் துறந்த எமது இனிய உறவுகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(T.M.R)
இளையண்ணா குடும்பம்,
வேம்படி, உடுத்துறை.

(5760)

### பூநகரி வாடியடியில்

## பெண்கள் வலுவூட்டும் பயிற்சி

" தலைமைத்துவம் வகிக்கக்கூடிய பெண்களை வலுவூட்டி உருவாக்கி சமுதாயத்தை வலுவடையச் செய்தல்"

**யாருக்கு:-** 17-28 வயதிற்குட்பட்ட பூநகரிப்பிரதேச பெண்கள்

**எப்போது:-** 14.03.2005 காலை 9.00 மணி

**காலம்:-** 6மாதங்கள் வாரநாட்களில் 9.30-4.30

**இவர்களுக்கு:-**

*தையல், பன்னவேலை, கேக்ஐசிங், சிகையலங்காரம்,பண்ணைவளர்ப்பு

*உளவியல், பெண்கள் தலைமைத்துவம், பெண்ணியம், ஆங்கிலம், பத்திரிகையில், ஊடகவியல், நாடகமும் அரங்கியலும், மனித உரிமைகள்.

**யாரால்:-** விடியல் நிலையம்

விண்ணப்பப்படிவங்கள் 7ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்

படிவம் 30/=

தொடர்பு-
இயக்குனர்,
விடியல் சதுக்கம்,
அடைக்கல அன்னை ஆலயம்,
வாடியடி, பூநகரி.

(5761)

## 67 ஆம் நாள் நினைவுகளும் அந்தியேட்டி அழைப்பும்



ந.நாகசோதி சி.கீர்த்தனா சி.நவசுஜிதா
மலர்வு:- 14.02.1964 → 29.07.1999 → 09.05.1983

26.12.2004இல் இடம்பெற்ற ஆழிப்பேரலையின் கோர அனர்த்தத்தின்போது எம்மைப் பிரிந்த...

ஆர்ப்பரித்தெழுந்த அலைகள் அன்று ஊரழித்த வேளையிலே
உனையிழந்தேன் என்னவளே - அன்று
தனித்து வாழ்ந்தாய் உன் தாயுடனே - இன்று
அம்மாவுடன் எம் பிள்ளையையும் அழைத்து
என்னைவிட்டுச் சென்றீரோ... என்றும் உங்கள்
ஆத்மா சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்... சாந்தி... சாந்தி... சாந்தி...

எமது இல்லத்தில் இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல்:
சி.சிறிகரன்
வேம்படி உடுத்துறை

(5759)

# ஐம்பது நாள் சுற்றுப் பயணமாக இந்தியா வந்தது பாகிஸ்தான் அணி



ஆறு ஆண்டுகளுக்குப் பின் இன்சமாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் ஐம்பது நாள் சுற்றுப் பயணமாக இந்தியா வந்தது. அந்த அணி மூன்று டெஸ்ட் மற்றும் ஆறு ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது.

இன்சமாம் தலைமையிலான பாகிஸ்தான் அணியினருக்கு டில்லி விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்திய கிரிக்கெட் சபை இணைச் செயலாளர் கவுதம்தாஸ் குப்தா, துணைத் தலைவர்கள் சி.கே.கண்ணா, ராஜீவ் சுக்லா ஆகியோர் வீரர்களை மாலை அணிவித்து வரவேற்றனர்.

பாகிஸ்தான் அணியின் வருகையையொட்டி டில்லி விமான நிலையத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. வரவேற்பு முடிந்ததும் வீரர்கள் தனி சொகுசு பஸ் மூலம் டில்லி தெற்குப் பகுதியில் உள்ள நட்சத்திர விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் தங்கினார்கள். அணி வீரர்கள் சென்றபகுதி யெல்லாம் பொலிசார் அதிகளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

[illegible] பாப் உல்மர் மற்றும் ராணா நவித் உல்ஹசன், அப்துல் ரசாக் ஆகியோரின் [illegible] வந்திருந்தனர்.

பாகிஸ்தான் அணி கடைசியாக 1999ஆம் ஆண்டில் வாசிம் அக்ரம் தலைமையில் இந்தியா வந்தது. இது பாகிஸ்தான் அணியின் ஏழாவது வருகையாகும். இந்தியச் சுற்றுப் பயணத்தில் இடம் பெற்றுள்ள பாகிஸ்தான் அணி வீரர்கள் விவரம் வருமாறு:-

இன்சமாம்(தலைவர்), யூனுஸ்கான், தூபீக் உமர், சல்மான்பட், அசீம்கமால், அப்துல் ரசாக், சோயிப் மாலிக், கமரன் அக்மால், கனேரியா, முகமது சமி, நவீத், அர்ஷத்கான், முகமது கலீல், யாசிர் ஹமீது, யுகானா, அப்ரிடி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

# பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு எதிராக சிறந்த திறனை வெளிப்படுத்தும்

## இன்சமாம்




"இந்தியாவுக்கு எதிரான தொடரில் பாகிஸ்தான் அணி சிறப்பான திறனை வெளிப்படுத்தும்" என்று அந்த அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் கூறியுள்ளார்.

கடந்த முறை இந்திய அணி பாகிஸ்தான் வந்து ஆடியபோது எங்கள் அணிக்கு நெருக்கடி இருந்தது. அதேபோல், இந்த முறை இந்திய அணி உள்ளூர் ரசிகர்கள் முன்பு ஆடுவது அதற்கு நெருக்கடியைக் கொடுக்கும். ஏனெனில், மக்கள் உள்ளூர் அணியிடம் அதிக எதிர்பார்ப்பு வைத்து இருக்கிறார்கள். இரு நாடுகள் இடையே அவ்வப்போது போட்டிகள் நடத்தினால், ஆட்டத் தரம் மேலும் வளர்ச்சி பெறும்.

இந்தப் போட்டித் தொடரில் எங்கள் அணி சிறப்பான தொடரை வெளிப்படுத்தும். இங்குள்ள தட்பவெப்ப நிலைதான் எங்கள் நாட்டிலும் இருப்பதால் சிரமம் இருக்கிறது. அவுஸ்திரேலியாவில் "பவுன்சி டிராக்கில் சமீபத்தில் ஆடி இருக்கிறோம். இதனால், இந்திய ஆடுகளத்திற்கு ஏற்ப ஆடுவதில் சிரமம் ஏற்படாது. எங்கள் துடுப்பாட்டக்காரர்களுக்கு ஆடுகளம் உதவிக்கரமாக இருக்கும்.

இந்தியா-பாகிஸ்தான் போட்டிக்கு எப்போதும் ஆர்வம் இருக்கும். அக்தர் இல்லாத குறையை இளம் வீரர்கள் போக்கும் விதமாக ஆடுவார்கள் என்று நம்புகிறேன். டெண்டுல்கர் சிறந்த வீரர். அவர் ஆட முடியாத நிலையில் இருந்தால் எதிரணிக்கு சாதகம்தான். நீண்ட இடைவெளிக்குப் பிறகு களம் திரும்பினாலும் அவருக்கு நன்றாக ஆடும் திறன் உண்டு. இவ்வாறு இன்சமாம் கூறினார்.

# உறுதியான சுறுசுறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்தியத் தொடரைக் கைப்பற்றுங்கள்-இம்ரான்கான்




உறுதியான, சுறுசுறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்தியத் தொடரைக் கைப்பற்றுங்களென இந்தியத் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணிக்கு அந்நாட்டின் முன்னாள் ஜாம்பவான் இம்ரான்கான் ஆலோசனை கூறியுள்ளார்.

முன்னதாக ஞாயிற்றுக்கிழமை கராச்சியில் அணி வீரர்களிடம் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார் முன்னாள் தலைவர் இம்ரான்கான்.

உறுதியான மனப்பான்மையுடனும் பொறுப்பான ஆட்டத்தாலும் 1986இல் எனது தலைமையிலான அணி இந்தியாவில் வெற்றிபெற்றது. தோல்வியைப் பற்றி நாங்கள் அப்போது கவலைப்பட்டதில்லை. அப்போது நாங்கள் கொண்ட உறுதி, அர்ப்பணிப்பு உணர்வு, சாதிக்கும் வல்லமை ஆகியவற்றை நீங்களும் வெளிப்படுத்தினால் வெற்றி நிச்சயம் உங்களது காலடியில்.


கடைசி வரை போராடும் உணர்வு வெற்றிக்கு மிகவும் அவசியம். இந்தியாவைக் காட்டிலும் மனோ ரீதியாக நீங்கள் வலுவானவர்கள். உங்களிடம் உள்ள திறமை, நுணுக்கங்கள் மீது முதலில் நீங்கள் நம்பிக்கை வையுங்கள். அப்போதுதான் வெற்றி வசப்படும். அணியாக விளையாடுவது அதைக் காட்டிலும் அவசியம்.நாடு பெருமையடையும் விதமான ஆட்டத்தை நிச்சயம் வெளிப்படுத்துவீர்கள் என நம்புகிறேன் என்றார் இம்ரான்கான்

# நான்காவது ஒரு நாள் போட்டியிலும் அவுஸ்திரேலியாவுக்கு ஏழு விக்கெட் வெற்றி



வெலிங்டனில் நேற்று நடைபெற்ற நியூசிலாந்துக்கெதிரான நான்காவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் அவுஸ்திரேலியா ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 233 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ஆரம்ப வீரர்களான பிளமிங் (37), ஆஸ்லே (37) இணை ஓரளவு பலமான அடித்தளத்தை (84) இட்ட போதும் பின்னர் ஆடிய வீரர்கள் கெயான்ஸ் (36) மக்மிலன் (35) ஆகியோரைத் தவிர ஏனையோர் சொற்ப ஓட்டங்களுக்குஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலிய தரப்பில் மெக்ராத், கிளஸ்பி, பிரட் லீ ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், கிளார்க், கஸ்பரோவிச், கோப் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.



பதிலுக்கு 234 என்ற வெற்றி இலக்கு நோக்கி ஆடிய அவுஸ்திரேலியா, கில்கிறிஸ்ட் டேமியன் மார்டின் ஆகியோரின் அபார துடுப்பாட்டத்தினால் மூன்று விக்கெட்டுக்களை மட்டுமிழந்து 236 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. பொண்டிங் பங்கேற்காததால் அணியை வழி நடத்திய கில்கிறிஸ்ட் 37 பந்து களில் 8 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கியதாக 54 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமி [illegible] போட்டி கைவிடப்ப[illegible] டால்மியா

ஆசிய 11 பேர், உலக 11 பேர் அணிகளுக்கிடையே சுனாமி நிவாரண நிதிக்காக கொல்கத்தாவில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி அதிகார பூர்வமாகக் கைவிடப்படவில்லை. ஆனால் அப் போட்டியை நடத்த சில பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளதால் நடைபெறுவது நிச்சயமில்லாத நிலையில் உள்ளது என ஆசிய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா விளக்கமளித்துள்ளார்.

ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் போட்டியை நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த நேரத்தில் இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி உள்ளதாலும், வானிலை உட்பட வேறு சில பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியும் உள்ளது. என்றாலும் போட்டி குறித்த இறுதி முடிவை ஐ.சி.சி விரைவில் அதிகார பூர்வமாக அறிவிக்கும் என்றார் டால்மியா.

# எல்லைப்படை மாவீரர் நினைவுக்கிண்ண காற்பந்து போட்டி இம்மாத நடுப்பகுதியில்

எல்லைப்படை மாவீரர் நினைவுக்கிண்ணத்திற்கானஉதை பந்தாட்டப்போட்டி இம்மாத நடுப்பகுதியில் இடம்பெறுவதற்கு வேண்டிய முன் முயற்சி நடவடிக்கைகளை தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப்பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

போட்டிகளில் 50 இற்கும் மேற்பட்ட அணிகள் கலந்து கொள்கின்றன. பருத்தித்துறை லீக், வலிகாமம் லீக், யாழ்ப்பாணம் லீக் உதைபந்[illegible] முதற்தடவையாக முல்லைத்தீவு மாவட்டத்தி[illegible]யும், கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இ[illegible] தென்மராட்சிப்பிரதேசத்தில் இருந்து ஒரு அணியும் [illegible]ன்றன. போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் [illegible]த்தில் இடம்பெறவுள்ளன. இப்போட்டிகளுக்கான நிரல் [illegible]யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (41)





# விக்கினேஸ்வரா அணிக்கு வெற்றி

புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணிக்கும் சுடரொளி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப்போட்டியில் விக்கினேஸ்வரா அணி வெற்றிபெற்றது.

முல்லை.மாவட்ட விளையாட்டுத்துறையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் பங்குபற்றிய இரண்டு அணி வீரர்களுக்கான பரிசில்களை முல்லை.மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் கமல் வழங்கிக் கௌரவித்தார். (08)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசிப் போட்டி முன்னாள் தலைவர் ஹீத்ஸ்ரீக் பங்கேற்கிறார்




இன்று நடைபெறும் தென்னாபிரிக்காவுடனான மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டியில் சிம்பாப்வே அணியின் முன்னாள் அணித்தலைவர் ஹீத்ஸ்ரீக் அவ்வணியில் பங்குபற்றுவார் எனத் தெரியவருகிறது. அவர் அண்மையில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது தெரிந்ததே.

இது தொடர்பாக ஸ்ரீக் கூறும் போது; அணிக்கு திரும்ப எதிர் பார்த்திருப்பதாகவும் அணிக்காக ஆடாது இருப்பது கவலையைத்தருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இவர் இறுதிப் போட்டியில் விளையாடுவதையும் அதனைத் தொடர்ந்து வரும் டெஸ்ட் போட்டிகளில் ஆடுவதையும் அணியின் முகாமையாளர் உறுதிப்படுத்தியுள்ளார். சுமார் ஒரு வருடத்துக்கு முன்பு கிரிக்கெட் நிர்வாகத்துடன் முரண்பட்டு அணியில் இருந்து 14 வீரர்கள் விலகினர். அதன் பின்னர் இவர்கள் இங்கிலாந்து கவுண்ரி அணிகளுக்காக ஆடினர். தற்போது பிளிக்னட் அணிக்கு திரும்புவதாக அறிவித்த பின்பு ஸ்ருவட் காலைல், ட்ரவர் கிறிஸ்பர் நில்பெரைரா ஆகியோரும் ஏ அணியில் இணைய விருப்பம் தெரிவித்தனர்.


ஸ்ரீக் அணிக்காக ஆடுவதில் மகிழ்ச்சியடைவதாகவும் பிரச்சினைகளை ஒதுக்கி விட்டு தைபுவின் தலைமையின் கீழ் ஆடவும் விருப்பந் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் தென்னா



பிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொண்டே வொண்டகியும் துடுப்பாட்ட வீரர் ஏ.பி.டி. வில்லியஸ்ம் அணிக்கு திருப்பியழைக்கப்பட்டுள்ளனர். வொண்டகி 2003 உலகக் கிண்ணத்தின் பின்னர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு



எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 02-03-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com


## அரசே பொறுப்பு!

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளைப் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வி அடைந்துள்ளது. ஆயினும் தோல்வியில் முடிவடைந்தது என்பதற்காக இவற்றை ஓரம் தள்ளி விடவோ ஒதுக்கி விடவோ முடியாது.

ஏனெனில் அரசியலில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகளின் மீது மேற்கொள்ளப்படும் இத்தாக்குதல்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டையே கேள்விக் குறியாக்கும் வகையில் பாரதூரமான விளைவுகளுக்கு விரைவில் இட்டுச் செல்லக் கூடியவை.

ஏனெனில் சூழ்நிலை எப்பொழுதும் ஒரே மாதிரியானதாக இருக்கும் என்றோ, தொடர்ந்தும் பொறுமை கடைப்பிடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதோ மடமை.

மட்டக்களப்பில் கடந்த மாதம் படுகொலை செய்யப்பட்ட மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்படப் போராளிகள் மற்றும் மாமனிதர் சந்திரநேரு போன்றவர்களின் படுகொலைகளின் பின்பும் விடுதலைப்புலிகள் பொறுமையுடன் யுத்த நிறுத்தத்தைப் பேணி வருகின்றனர். அமைதி காக்கின்றனர் என்பதினால் அரசாங்கம் தப்புக் கணக்கு போட்டுள்ளது போலத் தெரிகின்றது. அதாவது புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள் எனக் கருதுவது போல் உள்ளது.

இதன் வெளிப்பாடே மட்டு- அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி, துணைப் பொறுப்பாளர் சசிமதி மற்றும் போராளி அகநிலா ஆகியோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் இது அரசாங்கத்தின் தப்புக் கணக்கு என்பது மட்டுமல்ல. அரசாங்கமே இதற்கான விலையையும் கொடுக்க வேண்டிவரும் என்பதையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இப் படுகொலையைச் செய்தவர்கள் யார் என்ற கேள்விக்குப் பதில் தேடுகையில் கண்டுபிடிக்கப்பட வேண்டிய ஒரே ஒரு விடயம். இத் தாக்குதலை நடத்தியவரின் பெயர், விலாசம் என்பன மட்டுமே. இதற்கு அப்பால் எதுவுமே கண்டு பிடிக்கவோ, தேடப்பட வேண்டியஅவசியமோ இல்லை.

ஏனெனில் இத் தாக்குதல்களுக்கு முழுப் பொறுப்பும் சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கமே ஆகும். அரசாங்கம் இத்தகைய தாக்குதலுக்கு அங்கீகாரம் அளித்தால் போதும், செய்து முடிப்பவர்கள் எல்லாம் சிறிலங்காப் புலனாய்வுத் துறையினரும், இராணுவத் தரப்பினருமே ஆகும்.

அரச படைகளுடன் எந்தவொரு தமிழ்ஆயுதக் குழுவும் இணைந்து செயற்படவில்லை. எந்த ஆயுதக் குழுவிற்கும் அரசாங்கம் ஆயுதங்களை விநியோகம் செய்யவோ, பாதுகாப்பு அளிக்கவோ இல்லையெனச் சனாதிபதி சந்திரிகாவோ அன்றி அவருடைய அரசாங்கத் தரப்போ கூறிக் கொள்ளலாம். ஆனால் உண்மை நிலை அவ்வாறானதாக இல்லை என்பதைப் பல நிகழ்வுகள் ஏற்கனவே நிருபித்துள்ளன.

தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு அரசாங்கம் ஆயுதங்களை வழங்குவதென்பதும், அவர்களைப் பராமரித்து வருவதென்பதும், இதற்குப் பிரதியீடாக இவ் ஆயுதக் குழுக்கள் தமிழ்த் தேசியத்தைக் குலைக்கும் /பலவீனப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதும் விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் செயற்படுவதும் நீடித்து வரும் நிகழ்வுகளாகும். இத்தகைய ஆயுதக் குழுக்களில் ஒரு பகுதியினர் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினருடன் இணைந்து செயற்பட்டமை கூட கடந்த காலத்தில் வெளிவந்த விடயங்களாகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ துணைப்படை எதுவும் இல்லை. ஆயுதப் படைகளின் உதவியுடன் செயற்படும் ஆயுதக் குழுக்களும் இல்லை எனத் தெரிவிப்பது சிறுபிள்ளைத் தனமானது. சனாதிபதி சந்திரிகா பொய் கூறுவது புதிதல்லத்தான். ஆனால் உலகறிந்த உண்மையொன்றைத் தனது பொய்களால் மறைத்து விடலாம் என்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எண்ணுவது தான் மடமையாகும்.

இது தவிர இத்தகைய படுகொலைகள், படுகொலை முயற்சிகள் யாவும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே நடைபெற்றுள்ளன. இதன் காரணமாகப் இப் படுகொலைகளுக்கு இராணுவமே முழுப் பொறுப்பேற்க வேண்டும். இதில் இராணுவம் ஈடுபடவில்லை என்றோ, இராணுவத்திற்கு சம்பந்தம் இல்லை என்றோ மறுப்பதில் அர்த்தமில்லை.


ஆயுதக் குழுக்களோ, துணைப்படைப் பிரிவுகளோ இராணுவத்துடன் இல்லையெனில் தாக்குதல்களை மேற்கொள்பவர்கள் இராணுவத்தினர் என்பதாகிவிடும். ஏனெனில் தாக்குதல்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் என்பது மாத்திரமல்ல ஆயுதப் படைத்தரப்பின் முகாம்களுக்கு அண்மையாகவும், இராணுவக் காவலரண்களுக்கு இடையிலும் நடைபெறுவதே வழமையாகியுள்ளது.

ஆகையினால் இத் தாக்குதல்களை இராணுவத்தினரின் பலத்துடன் இயங்கும் துணைப்படைக் குழுக்கள் அன்றி இராணுவத்தினரே மேற் கொள்ளுதல் வேண்டும். இதில் யார் தாக்குதலை மேற்கொண்டாலும் அதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். அது மாத்திரமல்ல இத்தாக்குதலின் எதிர் விளைவுகளுக்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில் இவை இரண்டையும் போதிப்பவர்களாகவும், அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்பவர்களாகவும் ஆட்சியாளர்களே உள்ளனர்.

# சர்வதேச மன்னிப்புச்சபை ஸ்தாபகரின் மறைவிற்கு வடகிழக்கு ம.உ.ஆணைக்குழு அனுதாபம்

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஸ்தாபகர் பீட்டர் பெனன்சன் கடந்த மாதம் 26 ஆம் திகதி காலமானதை யிட்டு வட கிழக்கு மா காண மனித உரிமைகள ஆணைக் குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்திருக் கின்றது. அவ் அனுதாப செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது, பீட்டர் பென்சன் உடலளவில் மறைந்து விட்டாலும் அவரது சாசனம் மறைந்து விடாது அத்துடன் மனித உரிமைகளை மதியாமல் நடப்பவர்களையும் சர்வதேச மன்னிப்புச் சபையைப்பற்றி சிந்திக்காமல் இருப்போர் மீதும், அவரது சாசனம் அதிகாரம் செலுத்தும் என்றும் மேற்படி அவ் அனுதாபச் செய்தியில் தெரிவிக் கப்பட்டுள்ளது.



மேலும் அவரது பணி பற்றி அறியவேண்டுமாயின் முறைகேடுகளான பணிகளைத் திருத்துவதன் மூலமே அறியலாம்.

பெனன்சன் மாறுபட்ட உலகில் தன்னை அர்ப்பணித்து விட்டு சென்றுள்ளார். அநேகமாக 90 வீதமானோர் தனது முறைப்பாடுகளை சர்வதேச அரங்கில் கெண்டு வர உரிமை பெற்றுள்ளனர்.

பெண்கள்,சிறுவர்கள், தொழிலாளர்கள், சிறுபான்மையினர் எனச் சகலரது உரிமைகள் தொடர்பாகவும் அவரின் பணிக்காக நன்றி தெரிவிக்க வேண்டும்.

அவர்களின் நம்பிக்கையும், பலமும் வெற்றிகரமான பிரகடனங்களால் உறுதிப் படுத்தப் பட்டுள்ளது. அவரது சாசனத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து மனித உரிமைகளையும் பாதுகாத்து, வன்முறைகளைத் தடுத்து, அதனை எதிர்த்து பிறப்புரிமையைப் பேணி மனித உரிமைக் குழுவினர் நடக்க வேண்டும் என்பதே அவரது மறைவு விட்டுச்சென்ற சவாலாகும்.

உலக மனித உரிமை ஆணைக்கு அவர் இல்லாமல் ஒரு போதும் இருக்க முடியாது. ஆயினும் அவரது ஆன்மா எம்மை வழிநடத்தும் என்பதை நினைக்க நாம் மறக்கக்கூடாது. என்றும் அந்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# கொள்கை முன்னெடுப்புப் பிரிவுக் கலைஞர்களுக்கு சூரிச் விமான நிலையத்தில் வரவேற்பு

தமிழீழத் தாயகத்தின் பல்வேறு பாகங்களிலும் தெருவழி நாடகங்களை நிகழ்த்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் பலத்தைச் சேர்த்த தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப்பிரிவு கலைஞர்கள் தமிழீழத் தாயகத்தில் இருந்து சுவிஸ் சென்றுள்ளனர். இவர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் சுவிஸ் நேரப்படி மாலை 6.30 மணியளவில் சூரிச் விமான நிலையத்தைவந்தடைந்தனர்.இவர்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் குலம் சுவிஸ் நாட்டின் இதர பொறுப்பாளர்களும், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பனும், சூரிச் மாநில தமிழ் மக்களும் வரவேற்றார்கள்.இந்தக் கலைஞர் குழுவினரால், பாலா ஆசிரியரின் நெறியாள்கையில் “வழக்காடுகிறோம்” என்ற நாடகமும், புதுவையன்பனின் “கரை தேடும் ஓடங்கள்” என்ற நாடகமும் பல நாடுகளிலும் அரங்காற்றுகை செய்யப்படவுள்ளன.

விமான நிலையத்தில் புதுவையன்பன் கருத்துத் தெரிவிக்கையில்,

“புலம்பெயர்ந்து உலகின் பல்வேறு பாகங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் தமிழ் உறவுகளில் ஒப்பற்ற பாசமும், பற்றும், அக்கறையும் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் வைத்துள்ளார்” என்றும், தாயகத்தில் இருந்து போருக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் மக்களில் காட்டும் அதே அக்கறையையும், அன்பையும், கருணையையும் புலம்பெயர் வாழ் தமிழர்களிடம் தேசியத் தலைவர் வைத்துள்ளார் என்றும் கூறினார். புதுவை அன்பன் மேலும் பேசுகையில், ‘புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடையே விடுதலை, தாயகம் என்ற



உணர்வையும், சுதந்திர உணர்வையும், சமூக பண்பாட்டு வாழ்வியலையும், மேலும் ஊட்டி வளர்க்கும் முகமாக எமது கலைப் பயணம் அமையும் என்று நம்புவதோடு, புலம்பெயர் வாழ் தமிழர்களிடையே இருக்கும் துறைசார் அனுபவங்களை நாமும் பகிர்ந்து கொண்டு மேலும் எமது பணியை வலுப்படுத்த உதவக்கூடியதாக இருக்கும் எனவும் நம்பிக்கை கொள்கின்றேன்” எனவும் தனது தொடர் கருத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக்குழுவினரோடு வருகை தந்த தவபாலன் அவர்கள் சூரிச் விமான நிலையத்தில் வைத்து புலி யாட்டம் ஆடு என்ற பாடலைப் பாடி அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களையும் மற்றோரையும் கவர்ந்திழுந்தார். அங்கிருந்து அனைத்துக் கலைஞர்களையும் வரவேற்பாளர்கள் அழைத்துச் சென்றார்கள்.

# ஜே.வி.பி. தலைவர் சோமவன்சவுடன் லக்ஷ்மன் கதிர்காமர் சந்திப்பு

ஜே வி பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவ் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது சமாதான பேச்சுக்களின் ஆரம்பம் மற்றும் அரசாங்க கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் என்பவை தொடர்பாக இதில் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றுள்ளது. (32)

# புலிகள் மீதான தாக்குதல் குறித்து ஆராய சனாதிபதி ஆணைக்குழு

## -சனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து ஆராய இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட சனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிப் போராளிகள் மீது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நடாத்தப்படும் தாக்குதல்களின் பின்னணி மற்றும் தற்போதைய நிலவரம் குறித்து ஆராய்வதற்காக சனாதிபதி ஆணைக் குழு ஒன்றை அமைக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளதாகவும், அவர்கள் இது தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பலகூட்டுத்தாபனங்களை விற்பனை செய்ய பொதுத்துறை ஆணைக்குழு நடவடிக்கை

பொதுத்துறை மீளமைப்பு ஆணைக்குழு பல கூட்டுத்தாபனங்களை விற்பனை செய்யவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். எம்பிலிப்பிட்டிய, வாழைச் சேனை கடதாசி ஆலைகள் பிசிசி சிலோன்ஹிங்குரான சீனி ஆலை மற்றும் 12 ஏக்கர் பரப்பள வான பேரை வாவி ஆகியவையே விற்பனை செய்யப்படவுள்ளன. (32)

-இறங்குதுறையை ஆழப்படுத்துதல் குறித்து-

# மீனவர் சங்கம் - படையினர் சந்திப்பு பயனேதுமின்றி முடிந்தது

சுனாமி கடற்கொந்தளிப்பினையடுத்து தூர்ந்து போயுள்ள மீன்பிடி இறங்குதுறைகள் மற்றும் முருகைக்கல் அணை என்பவற்றைப் புனரமைப்புச் செய்வது தொடர்பாக மீனவ சங்கப் பிரதிநிதிகளிற்கும். படைஅதிகாரிகளுக்குமிடையே இடம்பெற்ற சந்திப்பு பலனேதுமின்றி முடிவுற்றுள்ளது.

இறங்கு துறைகளை ஆழப்படுத்தும்போது படைத்தரப்பின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு,தம்மால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரமே ஆழப்படுத்தும் பணிகளை முன்னெடுக்க முடியுமென பேச்சுக்களின் போது படைத்தரப்பு தொடர்ந்து வலியுறுத்தியுள்ளது.

அதேபோன்று கடல் அனர்த்தத்தினால் அழிந்து போயுள்ள முருகைக்கல் அணைப்பகுதியினையும் சுமார் இரண்டு அடி உயரத்திற்கு மட்டுமே மீள் அமைக்க முடியுமெனவும் படை அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பருத்தித்துறை துறைமுகப் பகுதியிலுள்ள இலங்கை இராணுவத்தின் 52-4 படைத்தளத்தினில் இடம்பெற்ற இச்சந்திப்பில் படைத்தரப்பின் சார்பில் குறித்த படைப்பிரிவின் அதிகாரி கேணல் ரட்ணாயக் ககலந்துகொண்டார். மேலதிகஅரசஅதிபர் எஸ். சிவசாமி மற்றும் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளான பலரும் கலந்துகொண்ட இச்சந்திப்பு காலை 10.30 மணிக்கு ஆரம்பித்து சுமார் அரை மணி நேரம் மட்டுமே இடம் பெற்றது. எனினும் பெரும்பாலான மீனவ சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தினில் கலந்து கொண்டிருக்கவில்லை. படைஅதிகாரிகள் தமது நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வர மறுத்த நிலையினில் மீனவ சங்கப் பிரதிநிதிகள் ஏமாற்றத்துடன் கூட்டத்திலிருந்து வெளியேறியிருந்தனர். (27)



பூநகரியில் நடைபெற்ற நிகழ்வில்வைப்பகப் பெயர்ப்பலகை திறப்பு (படம்:-செல்வா)

# கோதுமை மாவின் விலை 6 ரூபா 50 சதத்தால் அதிகரிக்கும்

(கொழும்பு)

கோதுமை மாவிற்கு அரசாங்கம் இதுவரை காலமும் பிறீமா நிறுவனத்திற்கு வழங்கி வந்த மானியத்தை நேற்று முதல் நிறுத்தத் தீர்மானித்ததை அடுத்து மாவிற்கான புதிய விலையை நடை முறைப் படுத்தவுள்ளதாக பிறீமா நிறுவன விற்பனை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய ஒரு கிலோ மாவின் விலை ஆறு ரூபா ஐம்பது சதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். இதேவேளை மாவின் விலை அதிகரிப்பினால் பாணின் விலை யில் மாற்றம் ஏற்படுமெனவும் இடைப்பட்ட காலத்தில் பாண் தயாரிப்பிற்கான பல மூலப் பொருள்களின் விலை அதிகரித்தமையும் இந்த விலை அதிகரிப்பிற்குக் காரணம் எனவும் கூறப்படுகிறது.

# முல்லை பிரதேச வர்த்தகர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி

முல்லைத்தீவுப் பிரதேச வர்த்தக சங்கத்தினர். சுனாமியால் பாதிக்கப்பட்டதற்கான உதவிகளைக் கோரி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்று முன்தினம் முல்லைத்தீவில் நடத்தினார்கள்.

நண்பகல் 11.00 மணிக்கு முல்லைத்தீவு பேருந்து நிலையத்திலிருந்து வர்த்தக சங்கத்தலைவர் எஸ்.மனோ தலைமையில் அனைத்துக் கடைகளும் பூட்டப்பட்டே இந்த ஊர்வலம் நகர்ந்தது. முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் செயலகம் வந்தடைந்து, முதல் கரை துறைப் பற்று உதவி அரச அதிபர்அ.சோதிநாதனைச் சந்தித்துக் கோரிக்கைகளை முன்வைத்தனர். தொடர்ந்து முல்லை மாவட்ட அரச அதிபரைச் சந்தித்து மகஜர் தலைவரினால் வாசிக்கப்பட்டு கோரிக்கைகளை முன்வைத்து கதைத்ததைத் தொடர்ந்து மகஜர்களை முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார், கௌரவ வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் கரை துறைப்பற்று உதவி அரச அதிபர் அ. சோதிநாதன் ஆகியோர்களும் மகஜர் வழங்கினர்.

மகஜரினைப் பெற்றுக் கொண்ட அரச அதிபர் தான் அதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் வங்கிக்கடன்கள் தொடர்பாக. அதற்கான இடையூறுகளைத் தெரியப் படுத்துமாறு வர்த்தக சங்கத் தலைவரிடம் கூறினார். அதனை எழுதி வெகுவிரைவினில் உதவி அரச அதிபரிடம் கையளிக்குமாறு தெரிவித்தார். இந்தப் பேரணியில் முல்லைப் பிரதேசத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட அனைத்து வர்த்தகர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2 6)

# இலங்கையின் எதிரி நாடாக நோர்வேயைப் பிரகடனம் செய்வோம்

-ஜாதிக ஹெல உறுமய தீர்மானம்

இலங்கையின் எதிரிநாடாக நோர்வேயைப் பிரகடனம் செய்ய ஜாதிகஹெலஉருமய தீர்மானித்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு சார்பாக நோர்வே செயற்படுவதாகவும் யுத்தநிறுத்த மீறல்கள் குறித்து எந்த விதமான நடவடிக்கையினையும்நோர்வே மேற்கொள்வதில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ள ஜாதிகஹெல உருமயவினர் நோர்வே இலங்கையின் எதிரி என அறிவிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது. இந்த விடயங்களை குறிப்பிட்டுக் கண்டனம் தெரிவிக்கும் கடிதம் ஒன்று இலங்கைக்கான நோர் வேத் தூதுவருக்கு ஜாதிக ஹெல உறுமயவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (32)

## கொள்ளை

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் இயங்கி வரும் தனியார் கையடக்க தொலைத்தொடர்பு நிறுவனத்தில் நேற்று முன்தினம் இரவு கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இங்கிருந்து கொள்ளையிடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் அமைந்திருக்கும் இடத்தில்இருந்துஐம்பது மீற்றர்தொலைவில் இராணுவ காவலரண் ஒன்று உள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

# பெண்போராளிகள் மீதான தாக்குதலுக்கும் அதிரடிப்படைக்கும் தொடர்பில்லையாம்

-விசேட அதிரடிப்படை கூறுகிறது

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் தம்பட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் பெண் போரளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திற்கும், தங்களுக்கு எந்த வித தொடர்பும் இல்லையென சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இது தொடர்பான அறிக்கை ஒன்றும் விசேட அதிரடிப் படையினரால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை வெளியிட்ட விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் லெபிகே இந்தச் சம்பவம் தொடர்பாகப் பாதுகாப்புப் படையினர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றது எனவும் தெரிவித்துள்ளார்.

## பிற்போடல்

மணல் அகழ்வு சம்பந்தமாக இன்று பி.ப.2.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருந்த கூட்டம்தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை பி.ப.2.30 மணிக்கு நடைபெறும் என்பதனை கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் அறியத்தருகிறார்.

## காயமடைந்தவர்...

எனப்படும் 46 வயதுடைய இந்நபர் புகையிரத நிலைய வீதியில் உந்துருளியில் சென்று கொண்டிருக்கையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவருக்கு நெஞ்சில் துப்பாக்கிச்சூடு விழுந்துஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். .

## பெண்...

இது போர் நிறுத்த உடன்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் செயல் எனக் குறிப்பிட்டுள்ளது

தாம் இந்தத் தாக்குதல் விடயத்தை பாரதூரமானதாகக் கருதுவதாகப் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## வவு...

திக்குள் போராளிகள் தங்குமிடத்திற்கு வந்த அவர்கள் தாங்கள் வந்திருந்த நோக்கத்தினைத் தெரிவிக்க மறுத்ததோடு அப்பகுதியில் இருந்து வெளியேறவும் மறுத்தனர். அத்துடன் அவர்களது செயற்பாடுகள் வழமையான நடைமுறைக்கு மாறாகவும் இருந்தன.

இவர்கள் இவ்வாறு நடந்து கொண்டது தொடர்பாக எமது மொழிபெயர்ப்பாளர் அவர்களிடம் கேட்டபோது தாங்கள் முக்கியமான விடயம் கதைக்க வேண்டும் என்றும் அவ்விடத்தில் வைத்தே கதைக்க வேண்டும் என்று கூறியதுடன், பின்பகுதியை விட்டு வெளியேறவும் மறுத்தனர்.

அப்பகுதியில் இருந்தே சிறிலங்கா பொலிசாருடன் தொலைபேசியும் கதைத்துக் கொண்டனர்.

இவர்களின் இந்த நடவடிக்கை மிகவும் கண்டனத்திற்குரியது. இவர்கள் தாங்கள் எமது அலுவலகத்திற்கு வந்த நோக்கம் என்ன என்பதை எமக்குத் தெரிவிக்கவில்லை.

இச் செயலானது எமக்கு வியப்பையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகின்றது.

முன்னரும் உண்மைக்குப் புறம்பான தகவலின்படி இம் மாவட்ட மகளிர் அரசியல்துறை செயலகத்திற்குச் சென்று அவர்களது தங்குமிடங்களையும், அவர்களது அறைகளையும் சோதனையிட முற்பட்டபோதும் இவ்வாறான முரண்பாடுகள் ஏற்பட்டன.

இதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து எமது அனுமதியுடனேயே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என எடுத்துக் கூறப்பட்டும் இருந்தது.

பொலிசாரது சில தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக அல்லது பொலிசாரது நடவடிக்கை ஒன்றுக்காகத்தான் கண்காணிப்புக் குழுவினர் இவ்வாறு நடந்து கொண்டுள்ளனர் என்பதை உணர முடிகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்திற்கும் தெரியப்படுத்தி உள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (10,21)

## புலிக...

விசேட அதிரடிப் படையினரால் இவர் கைது செய்யப்பட்டு கல்முனை பொலிசில் ஒப்படைக்கப் பட்டார்

தற்போது இந்நபர் மேலதிக விசாரணைக்காக திருக்கோவில் பொலிசாரிடம் கையளிக்கப் பட்டுள்ளார்.

இதேவேளை சில வருடங்களுக்கு முன்பு விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட இவர் சில காலம் ராசிக் குழுவில் இணைந்துசெயற்பட்டதாக இணையச்செய்தியொன்று கூறுகின்றது.

## தமிழீழ...

மகாவித்தியாலய அதிபர் பொன் தில்லைநாதன், பூநகரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு, தமிழீழ வைப்பகதின் மேலாண்மைப் பணிப்பாளர் வீரத்தேவன் ஆகியோர் உரைநிகழ்த்த சிறப்புரைகளை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசன் அவர்களும் நிகழ்த்தினர் வைப்பகத்தின் பெயர்ப்பலகையினை தமிழ்த்தேசிய பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசன் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தார். வைப்பகத் திறப்பினைத் தொடர்ந்து தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளரால் தேட்டக்கணக்கு முதன் முதலாக ஆரம்பித்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள், அரச அதிகாரிகள் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்தோர் எனப் பெருந் தொகையானோர் வைப்புக்களை ஆரம்பித்தனர்

## காயமடைந்த...

ணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.தமிழீழ விடுதலைப்புலிகள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (32)

## புலிகளையும்...

யாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர்கள் மூவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். போராளிகள் சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டியை இடைமறித்துத் தாக்குதல் நடாத்திய நபர் அதன் பின்னர் அருகேயுள்ள படைமுகாமினுள் சென்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கமைய இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகள்ாக அரசியல் பணியிலீடுபட்டுவரும் எமது போராளிகள் மீது தாக்குதலை மேற்கொள்வது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். இத்தாக்குதல் நடைபெற்ற வீதியில் விசேட அதிரடிப் படையினர் சகல வாகனங்களையும் சோதனையிட்டு வருவதால் அதிரடிப் படையினரின் ஒத்துழைப்பின்றி ஆயுதக்குழுவினர் இத்தாக்குதலை மேற்கொண்டிருக்க முடியாது. படைத்தரப்பின் அனுசரணையுடனும் ஆதரவுடனும் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வாறான தாக்குதல்கள் தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கும் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கான நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் பெரும் பங்கம் விளைவிக்கும் என்பதுடன் மூன்று வருடகாலமாகக் கடைப் பிடிக்கப்பட்டுவரும் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கும் பாரதூரமான விளைவையே எற்படுத்தும் என நாம் அஞ்சுகிறோம். யுத்தநிறுத்த காலப்பகுதியில் பல பொறுப்பாளர்களையும், போராளிகளையும் இவ்வாறான துரோகத்தனமான தாக்குதல்களால் இழந்தும்கூடபொறுமை காத்துவரும் தமிழ் மக்களையும், விடுதலைப்புலிகளையும் சீண்டும் நடவடிக்கையாகவே இவ்வாறான சம்பவங்கள் அமைகின்றன. இவற்றினால் ஏற்படப்போகும் விளைவுகள் தொடர்பாக இலங்கைப்போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவானது தனது அவதானிப்பையும் அறிக்கையையும் வெளியுலகிற்குத் தெரியப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது